# ஆய்த எழுத்து

தமிழியல் ஆய்வு இதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் - ISSN - 2278-7550

மார்ச் – 2020

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550



visit us: www.pallavipathippakam.in

பல்லவி பதிப்பகம்

ISSN : 2278-7550

2278-7550

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

ISSN : 2278-7550

மலர் : 8 | மார்ச்-2020 | இதழ் : 3



**பதிப்பாசிரியர்**

**நல் நடராசன்**

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549
97919 51549.

**பல்லவி பதிப்பகம்**

118, மேட்டூர் சாலை,
கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com



## EDITORIAL BOARD

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavur.*
mcthiyagu@gamil.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gamil.com

**Dr.B.Sathiyamoorthy**
*Madurai Kamaraj University, Madurai.*
tamilkanikani@gamil.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Sankaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gamil.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Trichy.*
alibavapkm@gmail.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
arangantnou@gmail.com

**Dr.S.Kavitha**
*Tamil University, Thanjavur.*
skavithatamil@gmail.com

**Dr.Manonmanidevi Annamalai**
*Sulthan Itrecue Kalviyal University, Malaysia.*

**Dr.Paramasivam Muthuswamy**
*Malasyia University, Malasyia.*
mparam98@gmail.com

## ஆசிரியர் குழு

**முனைவர் சி.தியாகராசன்**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
mcthiyagu@gmail.com

**முனைவர் க.இரமேஷ்**
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.*
grameshtu@gmail.com

**முனைவர் போ.சத்தியமூர்த்தி**
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.*
tamilkanikani@gamil.com

**முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்**
*கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.*
pjktamil@gmail.com

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*
krksankaraatamil@gmail.com

**முனைவர் உ.அலிபாவா**
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.*
alibavapkm@gmail.com

**முனைவர் சு.அரங்கநாதன்**
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்,,சென்னை.*
arangantnou@gmail.com

**முனைவர் ச.கவிதா**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
skavithatamil@gmail.com

**முனைவர் மனோன்மணிதேவி அண்ணாமலை**
*சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.*

**முனைவர் பரமசிவம் முத்துசாமி**
*மலேசியா பல்கலைக்கழகம், மலேசியா.*
mparam98@gmail.com

**R.F.Arooz**
*Raapa International Campus, Sri Lanka.*
raapa.arooz@gmail.com

## ADVISORY BOARD

**M.Senthilkumar**
*Periyar University, Salem.*
senthiltamilnesan@gamil.com

**Dr.V.S.Sreenivasan**
*Nandha Arts and Science College, Erode.*
srivc2345@gmail.com

**Dr.T.K.Anuradha**
*Trinity College For Women, Namakkal.*
anukeerthigan@gmail.com

**Dr.R.Vijyarani**
*Beshap Heeper College, Tirucherappalli.*
vejheya.rani@gamil.com

**Dr.R.Nirmala Devi**
*Vellalar Womens College, Erode.*
prnirmaladevi@gmail.com

**Dr.K.Gayathiri**
*Government Arts College, Chidambaram.*
gayathiripraba1981@gmail.com

**Dr.S.Kumaran**
*University of Malaya,Malaysia,*
skumaran.um@gmail.com

**Dr.S.Senthilkumar**
*Annamalai University, Annamalai nagar,*
dr.senthilkumarcdm@gmail.com

**Sellathurai Sutharsan**
*University of Peradeniya, sri Lanka,*
sellathuraisutharsan@gmail.com

**Dr.N.Sathya**
*Government College For Women, Kumbakonam,*
drsathiyatamil@gmail.com

**Balasundaram Elayathamby**
*Annamalai Canada Campus, Canada,*
Balasudarame@yahoo.com

**Dr.S.Priya**
*Government Arts College, Chidambaram,*
rojacreatives@gmail.com

**R.F.அரூஸ்**
*ராபா பன்னாட்டு வளாகம், இலங்கை.*
raapa.arooz@gmail.com

## ஆலோசனைக் குழு

**ம.செந்தில்குமரர்**
*பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.*
senthiltamilnesan@gamil.com

**முனைவர் வெ.ச.சீனிவாசன்**
*நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு.*
srivc2345@gmail.com

**முனைவர் தா.க.அனுராதா**
*டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்.*
anukeerthigan@gmail.com

**முனைவர் இரா.விஜயராணி**
*பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.*
vejheya.rani@gamil.com

**முனைவர் நிர்மலா தேவி**
*வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு.*
prnirmaladevi@gmail.com

**முனைவர் க.காயத்ரி**
*அரசு கலைக்கல்லூரி, சிதம்பரம்.*
gayathiripraba1981@gmail.com

**முனைவர் எஸ்.குமரன்**
*மலாய் பல்கலைக்கழகம், மலேசியா.*
skumaran.um@gmail.com

**முனைவர் ச.செந்தில் குமரர்**
*அண்ணாமலைப்பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்*
dr.senthilkumarcdm@gmail.com

**செல்லத்துரை சுதர்சன்**
*பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை.*
sellathuraisutharsan@gmail.com

**முனைவர் நா.சத்யா**
*அரசினர் மகளிர் கல்லூரி, கும்பகோணம்,*
drsathiyatamil@gmail.com

**பாலசுந்தரம் இளையதம்பி**
*அண்ணாமலை கனடா வளாகம், கனடா,*
Balasudarame@yahoo.com

**முனைவர் ச.பிரியா**
*அரசு கலைக்கல்லூரி, சிதம்பரம்,*
rojacreatives@gmail.com

# படைப்புகள் வரவேற்கப்படுகின்றன...!

**ஆய்த எழுத்து** - தமிழியல் ஆய்வுக்கான ஒரு புதியகளம். இவ்விதழ் 2013 ஆம் ஆண்டு முதல் காலாண்டு இதழாக வெளிவந்தது. 2018 இல் இருந்து மாத இதழாக வெளிவருகிறது. பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் கட்டுரை எழுதலாம். சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல் இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய பிற துறைகள் அனைத்தும் பொருளாகலாம்.

கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளுக்கு அக்கட்டுரை ஆசிரியரே பொறுப்பாவார். கட்டுரையாளர்களின் கருத்து இதழ் ஆசிரியர் குழுவின் கருத்தினை பிரதிபலிப்பன அல்ல. படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு. கட்டுரைகள் ஆய்வுத் தரமுடையவைகளாக அமைதல் வேண்டும். ஆய்வுப் பொருளுக்கு முரண்பட்டதாக அமையும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது. இவ்விதழுக்கு கட்டுரை அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

1. **பொருள்** : சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய அனைத்தும் இதன் பொருளாகலாம்.

2. **அளவு** : MSWord இல் A4 அளவில், 1.5 வாக்கிய இடைவெளியில் (Lining Space), பாமினி (Bamini Font) - 12 புள்ளி எழுத்தளவில், மூன்று முதல் ஐந்து பக்கங்களுக்குள் கட்டுரை அமைய வேண்டும்.

3. **முகவரி** : கட்டுரைத் தலைப்பின் கீழ் ஆசிரியர் பெயர், பதவி, முகவரியும், கட்டுரைமுடிவின் கீழ் இதழ் அனுப்ப வேண்டிய முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்களும் இடம்பெறவேண்டும்.

4. **கட்டுரை அனுப்பும் முறை** : கட்டுரையை ayidhaezhuthu@gmail.com (Or) pallavipublications@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

5. **சந்தா** : தனி இதழ் விலை ரூ.350/- இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் உறுப்பினர் கட்டணம் செலுத்தலாம். ஒரு ஆண்டிற்கு 12 இதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

1 ஆண்டுக்கட்டணம் (தனி நபர்) - ரூ. 3000/-
1 ஆண்டுக்கட்டணம் (நூலகம், கல்வி நிறுவனங்கள்) - ரூ. 3600/-

6. **கட்டணம் செலுத்தும் முறை** : உறுப்பினர் (சந்தா) கட்டணத்தை **PALLAVI PATHIPPAKAM** என்ற பெயரில் வரைவோலையாக (**DD**) ஈரோட்டில் மாற்றிக் கொள்ளத்தக்க வகையில் (**PAYABLE AT ERODE**) அனுப்பலாம். இணையவழி, (**NET BANKING**), அலைபேசி (**MOBILE BANKING**) வங்கி பரிவர்த்தனை உடையவர்கள் **NEFT** முறையிலும் பணம் செலுத்தலாம்.

**A/C Name: PALLAVI PATHIPPAKAM.**
**A/C Type : CA,**
**A/C No : 33679969977.**
**Bank : STATE BANK OF INDIA,**
**Sathy Road, Erode -638 011.**
**IFSC : SBIN0016100.**


**பல்லவி பதிப்பகம்**
118, மேட்டூர் சாலை, கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

**pallavipublications@gmail.com**
**ayidhaezhuthu@gmail.com**





**படைப்பாளர்களின் கவனத்திற்கு ....**

இதுவரை வெளியான, அனைத்து ஆய்த எழுத்து இதழ்களையும் எங்களது **www.pallavipathippakam.in** இணையத்தளத்தில், இதழ்கள் - ஆய்த எழுத்து பகுதியில் முழுமையாக பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம்.

**அல்லது**

**https://ayidhaezhuthu.in** என்ற இணையத்தளத்தில் பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம். அவ்வாறே தங்களது ஆய்வுக்கட்டுரைகளை இந்த இணையத்தளத்தின் வழியாக அனுப்பலாம்.

# பொருளடக்கம்


1. சிற்றிலக்கியம் - பள்ளுவில் வாழ்வியல் சிந்தனைகள்

***கு.கவிதா** - 1

**2.** புறநானூற்றில் தாய்மைத் தன்மைகள்

***சு.கி.நிஷாந்தி** - 4

3. இலக்கியத்தில் மனம்சார் அறம்

***முனைவர் ச.வனிதா** - 7

4. நற்றிணை ஈரெழுத்து ஒருமொழியில் அறம்

***பி.சுமித்திரா தேவி** - 11

5. கு.அழகிரிசாமிசிறுகதைகள் காட்டும் கரிசல் நிலவாழ்வியல்

***ஜெ.அருண் குமார்** - 15

**6.**புறத்திணையியல் காட்டும் வாழ்வியல் நெறிகள்

***சு.பாலசுந்தரி** - 19

**7.** அறநெறிச் சாரத்தில் அறச் சிந்தனைகள்

***முனைவர் பெ.சாமிதாஸ்** - 22

**8.** கொன்றைவேந்தன் சுட்டும் வாழ்வியல் சிந்தனைகள்

***கு.கங்காதேவி** - 26

**9.** புறநானூற்று குறுநிலமன்னர்களின் கொடைத்திறம்

***மு.கலைச்செல்வி** - 30

**10.** பாலை நில வாழ்வியல்

***ப.ஞானாம்பாள்** - 34

# சிற்றிலக்கியம் - பள்ளுவில் வாழ்வியல் சிந்தனைகள்

***கு.கவிதா,** முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழ்த்துறை), மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

**முன்னுரை:**

மனித எண்ணங்களுக்கும் சொல் மற்றும் செயல் திறன்களுக்கும் வெளிப்பாட்டு கருவியாகத் திகழ்வது இலக்கியமாகும். ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகச் சிறந்து விளங்கக்கூடிய தமிழ்மொழி செம்மொழியென உயர்ந்து விளங்கியதற்கு அடிப்படை ஆதாரமாக அமைவது சங்க இலக்கியமாகும். காலங்கள் மாறினாலும் படிக்கின்ற போதெல்லாம் சுவையினை தரக்கூடிய தனித்தன்மை சங்க இலக்கியங்களுக்கு உண்டு. அவ்வாறு சிறந்து விளங்கும் தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள் என்பதினை இக்கட்டுரையில் காண்போம்.

**வாழ்வியல் சிந்தனைகள்:**

மனித வாழ்க்கை குறித்த சிந்தனைகளை அகம், புறம் எனப் பகுத்து சங்க இலக்கியம் வாழ்வியல் கூறுகளை செவ்வனே வகுத்து தந்துள்ளன. தமிழ் இலக்கியங்கள் வழி வெளிப்படும் வாழ்வியல் சிந்தனைகள் ஆவன அரசனின் கொடை, அறம், போர், சுற்றுபுறச் சூழல் அரசியல் இயற்கை வழிபாடு, விவசாயம் என பல கூறுகள் கூறப்படுகிறது.

தமிழ் இலக்கிய வகையுள் ஒன்றாகிய சிற்றிலக்கியம் சமூகவியலுடன் சேர்ந்து மனிதனின் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்களைத் தன்னகத்தே பதிப்பித்துக் காட்டும் ஆவணமாக விளங்குவது சிற்றிலக்கியம். சிற்றலக்கிய வகை தொண்ணூற்றாறு வகையுள் ஒன்றான பள்ளு இலக்கியம் பற்றியும் சங்கம் முதல் தனிமனித சரித்திரம் வரை பள்ளு இலக்கியம் பாடப்பெற்றுள்ளது. பள்ளர்களின் அடையாளங்களையும் விவசாயம் அன்று முதல் இன்றளவும் சித்தரிக்கப்பட்டுள்ள வகைகளை இப்பகுதியில் சுருக்கமாக விளக்க முயன்று உள்ளேன்.

**மருதநில வேளாண் வாழ்க்கை:**

சங்ககாலம் முதல் 16ம் நூற்றாண்டு வரை இலக்கியங்கள் தோறும் பேசப்பட்டு தனி இலக்கிய வகையாக வளர்ந்து வந்தது பள்ளு இலக்கியம். ஐவகை நிலத்திலும் கருப்பொருளாக பேசப்பட்ட வேளாண்மை மருத நிலத்திலே முதன்மை தொழிலாக அமைந்து பேசப்பட்டது இலக்கியங்களில்.

**மருதம் - வயலும் வயல் சார்ந்த இடம்**

நிலத்தின் வளமையை கூறும் வகையில்

> **“கரும்பும் செந்நெல்லும் தென்னையும்**
> **வாழையும் கமுகும் பாவும்**
> **இஞ்சியும் மஞ்சளும் விளைவு**
> **ஆறாமல் விளையும் நிலம் மருதமென்று”** **(பட்டினப்பாலை 8, 16-19)**

இலக்கியங்கள் சான்று தருகின்றது

உழவர்கள் நாட்டின் உயிர் நாடியாக கருதப்பட்டனர் இதனை

**“உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**

**உண்டி முதற்றே உணவின் பிண்டம்” (புறம் - 18)**

என்றவாறு புறநானூற்றுப் பாடலில் குறிப்பிடக் காண்கிறோம்.

மனித வாழ்விற்கு அடிப்படையானது உணவு உணவைப் பெருக்கும் உழவுத் தொழில் சங்க காலத்தில் தலைமைத் தொழிலாக உயிர்த் தொழிலாக போற்றப்பட்டது. உழவு செய்தவர்கள் பள்ளர்கள் - பண்ணையார் என்ற வகையில் போற்றப்பட்டன..

**“வேளாண் மாந்தர்க் குழுதூண் அல்லது**

**இல்லென மொமிப் பிறவகை நிகழ்ச்சி” (தொல் பொருள் மரபு 81)**

என்றவாறு உழவர்களுக்கு உழவு தான் உயிர். உழுதலும் பயிரை காத்தலும் விளைச்சலைப் பெருக்கும் உத்திகளையும் அளவுகளையும் நெல்லை பயிரிட்டு பங்கிட்டு அறக் கொடைகள் செய்தும் வாழ்க்கை வாழ்ந்தனர்.

விவசாயம் செய்து மக்களை காப்பாற்றும் பள்ளர் இன மக்களை இந்திரன் மரபினர் என இலக்கியங்கள் போற்றுகின்றன. அவற்றை

**“இந்திரன் குலத்தோன்றிள நாள் முதலாக” (கட்டிமகிபன் பள்ளு பா-14)**

**“தேவேந்திரப் பள்ளனும் நான்” (வையாபுரிப்பள்ளு பா-8)**

ஆகிய பாடல்கள் உறுதி செய்யும்.

சங்க இலக்கியம் முதல் புராண இலக்கியம் வரை பேசப்பட்டு வந்த வேளாண் மக்கள் பற்றி 17, 18ம் நூற்றாண்டு வாக்கில் வந்த இலக்கியம் வரை மிகுதியாக பேசப்பட்டு வந்ததை இங்கு காணலாம்.

தனிமனித இலக்கிய வகையாக தோன்றிய சிற்றிலக்கிய கூறுகளை உள்ளடக்கிய வடகரை ஆதிக்கத்தின் சரித்திரத்தை இங்கு காணலாம்.

**வடகரை ஆதிக்கத்தின் சரித்திரம்.**

பள்ளு நூல்களில் இடம்பெறும் பள்ளியர் வருணனைகள் அக்கால பண்ணையார்களை மகிழ்ச்சி படுத்தி அவர்கள் கொடைகளை கூறும் வகையில் எழுதப்பட்டன. அங்குச் சொல்லப்படும் பல செய்திகள் அன்றைய காலத்தில் நிலவிய சமூக அரசியலைச் சார்ந்தவை காரணம் உழைக்கும் மக்களின் அகவாழ்வு உன்னதமானது போற்றுதற்குரியது.

விவசாயம் செய்யும் நிலத்தின் வருணணையுடன் மழைக்கு வேண்டி பல நிமித்தங்கள் செய்து மழையை வரவேற்று கிடாய் வெட்டி நிலத்தை பண்படுத்தி முதல் தொடக்கமே மங்களகரமாக செய்தனர் பள்ளர்கள்.

**“சேரியுள்ள பள்ளரெல்லாம் நல்ல செங்கிடாய் வெட்டித்தருவோம்**

**மாரியம்மை சாத்தாவே யின்று மழைதரு வீரமழை தருவீரே” (வட.ஆதி.ச.பக. 45)**

ஏர் பூட்டி உழவர் பொழுது புலர்ந்த நேரத்திலே மக்கள் போர்க்களம் போல திரண்டு நிலத்தை புழதிபடரச் செய்தனர் நிலத்தை பண்படுத்திய பின் பண்ணையார் வந்து விதை நெல் தந்து உழுவை தொடங்கி வைத்தல்.

**“காலும் பாற்கட காலுந் தூக்கியே**

**யேல வேகிழட் டிடையன் நோன்றினான்” (வட ஆதி.ச.பக. 57)**

மேலும் பள்ளன் - பள்ளி பாடு பட்டு நெல் கதிரை விளைவித்த பின் அறுவடை செய்து களத்தில் குவித்து வைத்து இறைவனுக்கு தன்னுடைய முதல் பங்கை வழங்குகின்றன.

தமிழ் இலக்கியங்களில் கூறப்படும் அளவை கருவிகள்இ கொடை, அறம் போன்றவை இந்நூலிலும் காணப்படுகின்றது.

**அளவை கருவிகள்**

**“மரக்காலுங் கைக்கட்டு மழவுங்கண்ட கண்ணால்**

**முரக்காலுங் கைக்கட்டுக் கண்டே”** (வட.ஆதி.ச.பக். – 59)

என்றும்

**நெல் அளத்தல்**

**வடகரை யனைய செல்வ வடகரை புரக்குங் கோமான்**

**கடகரி யழைக்க வந்த கருணைமால் பெரிய சாமித்**

**தடவரைப் புயத்தான் வாழ்வு தழைத்திடும் பணனை தன்னிற்**

**புடவியோர் மகிழப் பள்ளன் பொலியளந்தது சொல்வேனே** (வட.ஆதி.ச.பக் - 70)

என்றும்

பெரியசாமி துரையவர்களின் கொடைத்தன்மை பற்றி கூறும் வகையில்

**“அத்தர்திருக் குற்றாலத் துறைக்கட்டளை தனக்கு**

**முத்திருளன் வசமாக முத்து வெள்ளையளந்தேன்**

**அனதான சத்ரத்துக்கோராறாயிரங் கோட்டை”** (வட.ஆதி.ச.பக் - 71)

குற்றால அன்னதானத்திற்கு பதினாறாயிரம் கோட்டை நெல்லை அனத்தல் திருமலைக் கோயிலுக்கு தினக் கட்டளைக்கு புலவர்கள் பசி போக்க பதினாறாயிரம்படி என நெல் அளந்தான் பண்ணையார்.

இவ்வாறு வாழ்வில் விவசாயம் பெரிதும் மதிக்கும் வகையில் மேன்மையுடைய தொழிலாக அமைந்து மக்களை நல்வழிப்படுத்திய அக்காலம் முதல் இக்காலம் சிற்றிலக்கிய வகைகளை கொண்டு அறிய முடிகின்றது.

**அடிக்குறிப்புகள்**


1. கட்டிமகிபன் பள்ளு - கிருஷ்ணன் வி ஸ்ரீ<br>பதிப்பு ஆண்டு 1960<br>Balletin of the Oriental<br>Manuscripts Library<br>Madras.
2. வையாபுரிப்பள்ளு - பதி.ஆண் 1971<br>பழனி ஸ்ரீ தண்டாயுதபாணி<br>சுவாமி தேவஸ்தானம்
3. வடகரை ஆதிக்கத்தின் சரித்திரம் - சேத்தூர் சமஸ்தான வித்துவான்கள்<br>சரித்திரம் - மு.ரா.அருணாசலக் கவிராயர்<br>(வாலம் II) - மு.ரா.தற்கசாமிக் கவிராயர்
4. சிற்றிலக்கியங்கள் (கட்டுரை) - நாஞ்சில் நாடன்<br>பதி ஆண்டு – 2013<br>பாவை பிரிண்டர்ஸ்<br>சென்னை - 14

# புறநானூற்றில் தாய்மைத் தன்மைகள்

***சு.கி.நிஷாந்தி,** மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம், விவேகானந்தா கல்லூரி அகஸ்தீஸ்வரம்.

**முன்னுரை**

சங்க இலக்கியம் அக்காலத்தில் நிலவிய வாழ்க்கைக் கூறுகளாகிய அகம், புறம் என்ற பாடுபொருட்களை அடிப்படையாகக் கொண்டு விளங்கியது. இப்பாடுப்பொருட்களின் அடிப்படையில் தான் புறநானூறு புறத்துறை பற்றிய நிகழ்வுகளை ஆதாரமாகக் கொண்டது. இந்த உலகில் தாய்க்கு ஈடாக ஒப்பிட எதுவுமே இல்லை. தன் வாழ்நாளில் எத்தனையோ பாத்திரங்களில் பெண் வலம் வந்தாலும் அன்னை என்ற பாத்திரம் தான் மிக உன்னதமான இடத்தை வகிக்கிறது. அன்பு, கருணை, பொறுமை, இவைதாம் தாய்மையின் குணமா? என்று எண்ணும் பொழுது நம் கண் முன்னே வந்து நிற்பவர்கள் புறநானூற்று வீரத் தாய்மார்களே.

**தாய்மையின் வீரம்**

புறநானூற்றுத் தாய்மார்கள் தங்களின் பிள்ளைகளுக்கு வீரத்திற்கே சிறப்பிடம் கொடுத்து வளர்த்தார்கள். வீரம் என்ற அடிப்படை பண்பானது ஆண்களுக்கு மட்டுமே உரிய பண்பாக அமையாமல் பெண்களும் வீரம் மிக்கவர்களாக விளக்கினார்கள். போர்களத்தில் போர் புரிந்து தன் மகன் வீரமரணம் அடைந்த செய்தி கேட்ட வீரத் தாயின் மன உணர்வை “பூங்கணுத்திரை” என்னும் புலவர் படம் பிடித்துக் காட்டுகிறார்.

**“மீனுண் கொக்கின் றூவி யன்ன**

**வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன்**

**களிறெறிந்த பட்டன னென்று முவகை**

**நோங்கழை யலம்வரும் வெதிரத்து**

**வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே” (புறம்.277)**

வயதான தாயின் தன் கூந்தலானது கொக்கின் இறகைப் போல நரைத்துக் காணப்பட்டது. அவள் தன்னுடைய மகன் போரில் யானையுடன் போரிட்டு அந்த யானையை வீழ்த்திக் கொன்று விட்டு தானும் உயிர் விட்டான் என்னும் செய்தியைக் கேட்டு அப்புதல்வனைப் பெற்ற பொழுது அடைந்த மகிழ்ச்சியை விட அதிக அளவு மகிழ்ச்சி அடைந்தாள் என்பது விளங்குகின்றது. தாயின் வீரப்பண்பானது,

**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்**

**சான்றோ னெனக் கேட்டதாய் (குறள் 69)**

என்ற வள்ளுவனின் வாய்மொழி இந்த வீரத்தாயின் செயல்வழி விளங்குகிறது. தாய் வயது முதிர்ந்தவளாக இருந்தாள். கடைசி காலத்தில் தன்னை காப்பாற்றாமல் மகன் இறந்து விட்டானே என்று கவலைக் கொள்ளாமல் அவனைப் பெற்றதே சிறந்த வீரனாக ஆக்க வேண்டும் என்ற உள்ளார்ந்த நோக்கத்தையே கொண்டிருந்த தாயின் வீர உணர்வை அடையாளம் காண முடிகிறது.

**மகனை வீர மகனாக எண்ணும் தாயின் மனநிலை**

போர்க்களத்தில் தன் மகன் புறம் கொடுத்து ஓடினான் என்று பிறர் கூறக்கேட்ட தாயின் அரிய செயலைப் பின் வரும் பாடல் அடிகள் ஆவணப்படுத்துகின்றன.

**'நரம் பெழுந்துலறிய நிரம்பா மென்றோள்**
**முளரி மருங்கின் முதியோள், சிறுவன்**
**படையழிந்து மாறினன் என்று பலர் கூற**
**மண்டமாக் குடைத்தன நாயின், உண்ட என்**
**முலையறுத்திடுவேன் யானெனச் சினந்து**
**கொண்ட வாளொடு படுபிணம் பெயர்த்துச்**
**செங்களந் துழவுவோள் சிதிந்து வேறாகிய**
**படுமகன் கிடைக்கை காணூஉ**
**ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே' (புறம்: 278)**

முதுமை அடைந்த தாயனவள் தன் மகன் போர்க்களத்தில் புறங்கொடுத்து ஓடினான் என்று பிறர் சொல்வதைக் கேட்டு போர்க்களம் செல்வதற்கு முன்பே "அவ்வாறு அவன் உண்மையாகவே புறங்கொடுத்து ஓடினான் என்றால் பாலுண்டு வளர்வதற்கு காரணமான என் முலைகளை அறுத்திடுவேன்" என்று கோபமாக வாளைக் கையில் எடுத்துக் கொண்டு போர்க்களத்திற்கு சென்றாள். அங்கு இரு துண்டுகளாகிக் கிடக்கும் மகனின் உடலைப் பார்த்தவுடன் அத்தாயானவள் அவனைப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியை விட அதிக மகிழ்ச்சி அடைந்ததைப் பாடல் அடிகள் மூலம் அறிய முடிகின்றன. தாய் தன் மகன் போரில் இறப்பது தான் அவனுடைய வாழ்க்கையின் குறிக்கோளாகக் கருதும் உன்னத மன உணர்வை வெளிக் காட்டுகிறது. போரில் மகன் புறங்கொடுத்து ஓடினான் என்றுக் கூறியதை நம்பாமல் போர்க்களத்திற்கு நேரிலே சென்றது மகனின் வீரத்தன்மை குறித்த நம்பிக்கையையும், வீர உணர்வையும் பிரதிபலிக்கிறது. தாயும் கூட வீரமில்லாதவனை ஏற்றுக் கொள்ளாதவளாக வீரத்திற்கு சிறப்பிடம் கொடுத்த பெண்களாகவே சங்ககாலப் பெண்கள் விளங்கியதை உணர முடிகிறது.

**மகனைப் போர்க்களம் பணித்தல்**

தாய் ஒருத்தி தன் ஒரே ஒரு மகனைப் போருக்கு அனுப்பும் செயலை ஒரு புற நானூற்றுப் பாடல் பதிவு செய்துள்ளதை அறிய முடிகிறது.

**கெடுக சிந்தை கடிதிவன் துணிவே**
**மூதிற் பெண்டி ராதல் தகுமே**
**மேனாள் உற்ற செருவிற் இவல் தன்னை**

------------------------------------------------------------------

**"பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி**
**ஒருமகன் அல்லது இல்லோள்**
**செருமுக நோக்கிச் செல்கென விடுமே" (புறம் - 279)**

என்னும் பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன. ஒரு பெண்ணின் தந்தை போர்க்களத்தில் போர் புரிந்து இறந்தான். பின்பு அவளுடைய கணவனும் போரில் வீரமரணம் அடைந்தான். அவர்கள் இருவரையும் இழந்த பெண் தன்னுடைய ஒரே மகனையும் போருக்காக போர்க்களத்திற்குச் செல்லும் படி அனுப்புகின்றாள். தன் மகனுக்கு ஆடை இட்டு, அவனுடைய தலைமுடிக்கு எண்ணெய் தேய்த்து வீரமொழிகளைக் கூறி வழியனுப்புகிறாள். தன் சொந்தங்களை இழந்த

தாயானவள் அதற்காக வருத்தப்படாமல் தன் ஒரே மகனை போருக்கு அனுப்புவதும் கடமை என்று கருதி போர்க்களத்திற்கு அனுப்பி வைக்கும் தாயின் வீர உணர்வையும், போருக்கு முக்கியத்துவம் கொடுக்கும் உன்னத குணப் பண்பையும் விளங்கிக் கொள்ள முடிகிறது.

**புலியினது குகை இது**

ஒருநாள், மறக்குடியில் பிறந்து மறக்குடியில் மணம் புரிந்த பெண்பாற் புலவராகிய காவற்பெண்டு என்பவரின் இல்லத்திற்கு வந்த ஒருவர் அவரின் சிறிய வீட்டின் தூணைப் பிடித்துக் கொண்டு அவர் மகன் எங்கு உள்ளான் என்று கேட்டார். அதற்கு காவற்பெண்டு, “உன் மகன் எங்கே உள்ளான் என்று நீ என்னைக் கேட்கின்றாய். இதோ என் வயிற்றைப் பார், என தன் வயிற்றைக் காட்டி, அவனைப் பெற்ற வயிறு இது புலி இருந்து சென்ற குகை இது என் மகனுக்கும் எனக்கும் உள்ளத் தொடர்பு புலிக்கும் குகைக்கும் உள்ள தொடர்பைப் போன்றது. என் மகன், அந்த புலி இப்போது குகையை விட்டு வெளியே போய்விட்டது அவன் இப்போது தன் நாட்டிற்காக போர்க்களத்தில் இருப்பான். அங்குப் போய் பார்” என்று கூறுகிறார். இதோ அந்த வீரத் தாயின் பாடல்.

**“சிற்றில் நற்றூண் பற்றி, நின்மகன்**

**யாண்டு உளன் ஆயினும் அறியேன் ஓரும்**

**புலி சேர்ந்து போகிய கல்அளை போல,**

**ஈன்ற வயிறோ இதுவே**

**தோன்றுவன் மாதோ, போர்க்களத் தானே”** (புறம் 86)

**முடிவுரை**

சங்ககாலச் சமுதாயம் ஆண்கள் வீரத்துடன் விளங்கியதைப் போலவே பெண்களும் வீரத்துடன் விளங்கியதை எடுத்துக்காட்டுகிறது. வீரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்ததோடு மட்டுமில்லாமல் தம் புதல்வர்களையும் வீரமகனாக வளர்த்தனர். வீரத்தை நிலைநாட்டுவதே தாயின் முக்கிய நோக்கமாகக் கருதப்பட்டதை புறநானூற்று பாடல்கள் சான்று பகிர்கின்றன. தன் இறுதி சடங்கினை நிறைவேற்ற மகன் வேண்டும் என்று தாய்மார் எண்ணுகின்ற இன்றையச் சூழலில் நாட்டுக்காக மகன் இறந்தது எண்ணிப் பெருமை கொள்ளும் புறநானூற்று அன்னையாரின் தாய்மை போற்றதலுக்கு உரியதாகும்.

# இலக்கியத்தில் மனம்சார் அறம்

***முனைவர் ச.வனிதா,** உதவிப்பேராசிரியர் - தமிழியல்துறை, தருமபுரம் ஞானாம்பிகை அரசு மகளிர் கல்லூரி மயிலாடுதுறை - 609 001.

மனிதனின் முழுமையான ஆற்றல் மனவெளிப்பாட்டால் அறிவதாகும். மன அழகுதான் மனிதனின் மிக அழகு. மனம் கோணலாக இருந்தால் மனிதனின் முகமும் கோணலாகிவிடும். பாரதியின் 'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை, யார்க்கும் அஞ்சாமை இவை மன அறத்தின் சாட்சியங்களாய் காட்சியளிக்கின்றன. எனவே தனி மனிதனை அடையாளப்படுத்துவது மனமே ஆகும். மனிதர்களை வேறுபடுத்துவதும் மனம்தான். அதனால் தான் மனம் உடையவர்கள் மனிதர்கள் என்று அடையாளப்படுத்தப்படுகிறது. இந்த மன வெளிப்பாடு பிற உயிர்களான பறவைகள், நீந்துவன, விலங்கினங்கள், தாவரங்கள் ஆகியவற்றிலிருந்து வேறுபட்டனவாக உருவாகின்றன. மன அறமே மனித அறம் என்பதை எண்ணவைப்பது. இது குறித்து அறிஞர் ச.வே.சுப்பிரமணியன் கூறும் கருத்து எண்ணத்தக்கது. "உலக உயிர்கள் அனைத்திற்கும் உடலும் உயிரும் உண்டு ஆனால் மனிதனுக்குத்தான் சிறப்பு நிலையாக மனம் உள்ளது"(1) என்று குறிப்பிட்டுள்ளார். (ச.வே.சுப்பிரமணியன், க.ஆ.திருக்குறளில் மனம், ப.19) எனவே தான் 'மனம்போல் வாழ்வு' என்ற மரபுமொழி இருப்பது எண்ணத்தக்கது.

மனம் என்பது மனிதனுக்கு அமைந்த சிறந்த ஒன்றாகும். இது மூளையோடு தொடர்புடையது. அது நடத்த மனிதன் செயல்படுகிறான். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் மனநலம் குறித்த பதிவுகள் நிரம்ப இடம்பெற்றுள்ளன. மனத்தை நெஞ்சம் ஒன்று நாலடியார் பகர்ந்துள்ளது. மனம் என்ற சொல்லாடலையும் அது முன்மொழிந்துள்ளது.

**"கடல் சார்ந்தும் இன்னீர் பிறக்கும் மலைசார்ந்தும்**
**உப்புண்டு உவரி பிறத்தலால் தத்தம்**
**இனத்தனையர் அல்லர் எறிகடல்தான் சேர்ப்ப**
**மனத்தனையர் மக்கள் என்பார்"(2) (நாலடியார், பா.எண்.245)**

என்பதால் கடல்பகுதி உப்புதான். ஆனால் அதன் கரைப்பகுதியில் நல்ல நீரும் சுரக்கும். மலைப்பகுதியில் நல்லநீர் பெரும்பாலும் கிடைக்கும். ஆனால் அங்கும் உப்புநீர் உண்டு. மனித இனத்தால் வாழ்பவர் எல்லாம் மனிதர்கள் அல்லர். மனத்தால் எவர் வாழ்கின்றாரோ அவரே மனிதர் என்னும் மன அறம் புலப்படுத்தப்பட்டுள்ளது. இப்பாடலில் மனம் கொண்டவர் மக்கள் என்னும் சொல்லாட்சி இடம்பெற்றிருப்பது அறியத்தக்கது. மற்றொரு பாடலில் நெஞ்சம் என்று சுட்டியுள்ளார். கல்வி குறித்த அப்பாடல்,

**"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து**
**நல்லம்யாம் எனும் நடுவுநிலைமையால்**
**கல்வி அழகே அழகு" (நாலடியார் பா.எண்.131)**

என்பதாகும். இப்பாடலில் அழகு என்று நாம் மேலோட்டமான புற அழகையே அழகு என்று மகிழ்கின்றோம். உண்மையில் அவையெல்லாம் அழகல்ல. மனத்தூய்மைதான் ஒருவனுக்கு சிறந்த அழகைத் தரும். ஒருவனை 'நல்லவன்' என்று அவன் மனமே சான்றளிக்க வாழவேண்டும். அதனால்தான் நல்லவன் வாழ்வான் என்றும் மனசாட்சியோடு சொல் என்றும் 'மரபுமொழிகள்' மக்கள்புறத்தில் சொல்லப்படுவதுண்டு. மனத்திடம் மகளிர் மாட்டும் உடல்திறன் ஆடவர் மாட்டும் அமைந்திட்ட மனித உடலத்தில் ஆணும் மனத்திடம் பெறவேண்டும்.

மனம்தான் மனிதனைத் தீர்மானிக்கும். அவனின் செயல்பாடுகளுக்கும் காரணமாகின்றது. மனத்தில் எழும் தீய எண்ணங்களே அவன் செய்யும் தீவினைகளுக்குக் காரணம். அந்த மனத்தின் இயல்பினை மனிதமுகம் போன்று எதிரில் காட்டும் கண்ணாடி வேறு எதுவும் இல்லை. வள்ளுவ ஆசானும் 'நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்' (குறள். 706) என்று குறிப்பிட்டுள்ளார். நான்மணிக் கடிகையிலும் இந்த மனத்தறம் பேசப்பட்டுள்ளது.

**"நாற்றமுரைக்கும் மலருண்மை கூறிய**

**மாற்ற முரைக்கும் வினைக் கலந் தூக்கின்**

**அகம் பொதிந்த தீமை மன முரைக்கும் முன்னம்**

**முகம்போல முன்னுரைப்பதில்" (நான்மணிக்கடிகை, பா.எண்.48)**

என்பதில் வள்ளுவவாசகம் ஒலிக்கக் காணலாம்.

மனம் என்பது ஒரு சொல் பல பொருண்மைக்குரியதாகின்றது. மனம் நிறைவைத் தரும்போது ஏற்படும் நிலைகள் ஒருக்கம். மனப்போக்கு என்று இடம்பெறுமிடத்தில் நிலையின்மையைக் கூறுவதாகின்றது. மனத்தூய்மை என்னும்போது உள்ளக்கிடையை வெளிப்படுத்துகிறது. மனத்தால் உணரும் நிலை உண்மைக்குச் சான்றாய் மாறுகிறது. மனம் மகிழ்வூட்டல் பெறும்போது ஒட்டுமொத்தமான உடலியம் செயல்படுவதை ஊற்றுக்கண்ணாக்குகிறது.

மனத்திற்கான அறமாண்புகள் சிலவற்றையும் வள்ளுவத்தால் அறியமுடிகின்றது. மனம் இயங்க அன்ப வேண்டும். அதனால் அன்புடைமை வகுத்தார். அதனால் தொடரும் அறிவுடைமை, அருளுடைமை, அடக்கமுடைமை, ஆள்வினையுடைமை, ஒழுக்கமுடைமை, ஊக்கமுடைமை, நாணமுடைமை, பொறையுடைமை, பண்புடைமை என்பன மனம்சார் அறங்களை வெளிப்படுத்த உதவுவன என்பதை உணர்ந்து கொண்டால் மனத்தறம் புரிதலில் வெற்றிபெற முடியும்.

**"அன்பொப் இயைந்த வழக்கென்ப ஆர் உயிர்க்கு**

**என்பொடு இயைந்த தொடர்பு" (குறள் எண்.73)**

என்பதால் மனித மனத்தில் தோன்றும் முதன்மைப்பண்பு அன்பு என்பதை உணரவேண்டும். அன்பின் வெளிப்பாடே மனிதனின் முதல் அடையாளம். இதுதான் உலகத்துக்கே அணியாகும் சிறப்பு பெற்றது என்பதை நான்மணிக்கடிகையும் அன்பை வெளிப்படுத்தியுள்ளது. அன்புடையவர்களிடமே ஆறு குணங்கள் இருக்கும் என்பதை ஏலாதி இலக்கியம் எடுத்துக்காட்டுகிறது.

**"சாதல் பொருள் கொடுத்தல், இன்சொல் புணர்வு,**

**உவத்தல், நோதல், பிரிவில் கவறலே – ஓதலின்**

**அன்புடையார்க்கு உள்ளன ஆறும் குணம் ஆக**

**மென்புடையார் வைத்தார்"**

என்பதால் உணர முடிகின்றது. (ஏலாதி, பா.எண்.)

மனித இயல்பில் அறிவு என்பது மிகவும் இன்றியமையாத கூறாகும். வாழும் போதும் வாழ்ந்த பின்னரும் மனித அறிவுசார் பொருட்கள், நூல்கள் காலத்திற்கும் எடுத்துச் செல்லப்படும் மரபு அறிவிற்கு மட்டுமே உள்ளது. அது தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் பயன் நல்கும் மனக்கூறாகும். அதனால்தான் வள்ளுவர் ''அறிவு ஆற்றல் காக்கும் கருவி'' என்றார் (குறள் எண். ) மனிதனுக்குரிய துன்பத்தை அறிவே காப்பாற்றுகிறது. அறிவின் சிறப்பினைப் பல குறள் வெண்பாக்களில் வள்ளுவர் மொழிந்துள்ளமையும் எண்ணத்தக்கது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான நாலடியாரினும் அறிவுடைமைப் பதிவுகள் இடம்பெற்றுள்ளன. இதனை,

**''நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை**

**நிலைகலக்கிக் கீழிரு வானும் நிலையினும்**

**மேன்மேல் உயர்ந்து நிறுப்பானும் தன்னைத்**

**தலையாகச் செய்வானும் தான்'' (நாலடியார், பா.எண்.248)**

என்பதால் அறிவுறுத்துகின்றார். இதனால் அறியக்கிடக்கும் செய்தி ஒருவனின் உயர்வு தாழ்விற்குக் காரணம் அறிவே என்பதை உய்த்துணரச் செய்துள்ளார். இத்தகைய அறிவு மனிதனுக்கு அனுபவத்தால் கிடைக்கும். பல நூல்களைக் கற்பதனால் கிடைக்கும். அறிவுடைய சான்றோரை மறைப்பது என்பது இயலாத செயல். அவரின் செயல்பாடு எந்த வகையிலாவது வெளித்தோன்றிக் கொண்டே இருக்கும். இது நீர் நிறைந்த குளத்தில் பாசியால் நீரை மறைப்பதற்கு ஒக்கும். பாசி விலகினால் நீர் நிலை தெளிவாகத் தெரியும். இதனை உணர்ந்தே பழமொழி இலக்கியம்,

**''பரந்த திறலாப் பாசிமேல் இட்டுக்**

**கரந்து மறைக்கலும் ஆமோ? நிரந்து எழுந்து**

**வேயின் திரண்டதோள் வேல்கண்ணாய் விண் இயங்கும்**

**ஞாயிற்றைக் கைம்மறையார் இல்'' (பழமொழி, பா.எண்.32)**

ஞானிகள் அருள்தன்மைப் பெற்றவர்கள் இரக்கக்குணம் வாய்க்கப் பெற்றவர்கள். வள்ளலார் அருள்தன்மை வாய்ந்ததனால் தனர் 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்றார். ஏசு பெருமான் பகைவரையும், கொடியவரையும் மன்னித்து அருளினார். நபிகள் நாயகம் அருள்தன்மையோடு உயிர்களைக் காத்தவர். சைவர்களும், சமணர்களும், பௌத்தர்களும், வைணவர்களும் போற்றும் நெறி அருள் நெறி இதற்கும் மன அறம் வேண்டும். பிற உயிர்களைக் கொன்று தின்னும் வழக்கம் இருந்தால் அருள்தன்மை ஏற்படாது என்கிறது திரிகடுகம்.

**''ஊனுண்டு உயிர்கட்கு அருளுடையேம் என்பானும்**

**தானுடன்பாடு இன்றி வினையாக்கும் என்பானும்**

**காமுறு வேள்வியில் கொல்வானும் இம்மூவர்**

**தாமறிவர் தாம்கண்ட வாறு'' (திரிகடுகம், பா.எண்.)**

சிறுபஞ்ச மூலத்திலும் அருள் தன்மை போற்றப்படுகிறது.

**''பொருள் போகம் அஞ்சாமை பொன்றுங்கால் போந்த**

**அருள்போக ஆரறமென்றும் ஐந்தும் இருள்தீரக்**

**கூறப்படும் குணத்தான் கூர்வல்வேல் வேந்தனால்**

**தேறப்படும் குணத்தினான்'' (சிறுபஞ்சமூலம், பா.எண்.)**

என்று குறிப்பிடும் பாடலில் மன்னனால் விருப்பப்படுவார்க்கு ஐந்து குணங்கள் தேவை என்றும் பொருள், போகம் போன்ற அழிந்தாலும் கவலைப்படாமை, அஞ்சாமை, அருள் தன்மை, அறம் ஆகிய ஐந்து குணங்கள் வாய்க்கப் பெறவேண்டும். அதற்குரிய தன்மைகளால் அருள் மனம்சார் பதிவாக இடம்பெற்றுள்ளமை அறியத்தக்கது.

மனிதச் செயல்பாட்டில் அடக்கம் எப்போதும் எவ்விடத்தும் வேண்டும். இதுவும் மனம்சார் அறத்தின் வெளிப்பாடாகும்.

**“கற்றறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்**

**பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பார் – தெற்ற**

**அறைகல் அருவி அணிமலைநாட**

**நிறைகுடம் நீர் தளும்பல் இல்” (பழமொழி, பா.எண்.200)**

எனும் பழமொழி இதற்குச் சான்றாய் உள்ளது.

ஆய்வினையுடைமையும் மனம்சார் அறமாக உள்ளது. இதனால் தன்னார்வம், தனித்துவம், தகுதி என்பன வெளிப்படும்.

**“நல்ல குலமென்றும் தீய குலமென்றும்**

**சொல்லளவு அல்லால் பொருளில்லை சொல்சிறப்பின்**

**ஒன்பொருள் ஒன்றோ தவர்கல்வி ஆள்வினை**

**ஒன்றிவற்றான் ஆகும் மூலம்” (நாலடியார், பா.எண்.195)**

என்பதால் மனித குலத்தைத் தீர்மானிப்பதில் ஆள்வினையும் ஒன்று என்று பகர்கின்றது.

மனம்சார் அறத்தில் ஒழுக்கம், நாணம், ஊக்கம், பொறை, பண்பு, வாய்மை, மானம் என்பனவும் இயங்குகின்றன.

மனித ஆற்றலால் மதிப்பிட முடியாத சக்தியாக மனம் இயங்குகின்றது. மனக்கட்டுப்பாடு மனிதனை மேலும் உயர்த்துகின்றது. மனம் இல்லா வாழ்க்கை இல்லை. மனம் இல்லாமல் வேண்டுதல் இல்லை. தனி மனித வாழ்வு உயரவும் தாழவும் மனமே காரணம்

**பயன்மை நூல்கள்**


1. திருக்குறள்
2. ஏலாதி
3. நாலடியார்
4. பழமொழி நானூறு
5. நான்மணிக்கடிகை
6. திரிகடுகம்

# நற்றிணை ஈரெழுத்து ஒருமொழியில் அறம்

***பி.சுமித்திரா தேவி,** உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை, தி.தெ.மா.நா.ச.கல்லூரி, தெ.கள்ளிகுளம், திருநெல்வேலி-627 113.

சங்க இலக்கிய நூலான எட்டுத்தொகையில் முதல் நூலாக அமைந்து சிறப்பு பெற்றதே நற்றிணை. எட்டுத்தொகை நூல்களுள் 'அகம்' பற்றியது நற்றிணை. இந்நூல் பண்டைத் தமிழர்கள் போற்றி வாழ்ந்த நல்ல ஒழுக்க நெறிகளைப் படம்பிடித்து காட்டுகிறது. இலக்கணமும் இலக்கியமும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. நம் தமிழ் மொழியும் தமிழ் இலக்கியமும் சொல்வளம் மிக்கது. தமிழ் இலக்கியங்களுள் ஒன்றான எட்டுத்தொகையுள் இரண்டு எழுத்துக்களால் ஆன ஈரெழுத்து ஒருமொழிகள் குவிந்து காணக்கிடக்கின்றன. அந்தவகையில் அறத்தைக் குறிக்கும் ஈரெழுத்து ஒரு மொழிகள் பற்றிய ஒரு புதிய ஆய்வை மேற்கொள்ளும் தேடலாய் இக்கட்டுரை அமைகிறது.

**அறம் - சொற்பொருள் விளக்கம்**

'அறம்' என்ற சொல் ஆழ்ந்த செறிவான நுணுக்கமான பொருளைத் தருவது. அதற்கு பொருள் தருவது எளிதன்று. அறம் என்ற சொல் இன்று பல்வேறு தொணியில் பகுத்துரைக்கப்படுகிறது.

அறம் என்பதற்கு தருமம், புண்ணியம் என்று தமிழ் அகராதி பொருள் தருகிறது. 'அறம்' என்ற சொல்லமைப்பு ஆய்வியல் அடிப்படையில் நோக்கும் போது 'அறு' என்னும் அடிச்சொல்லிற்கு அறுத்துச்சொல், வழியை உண்டாக்கு, உருவாக்கு, வேறுபடுத்து, தூண்டி வரைமுறைப் படுத்து என பல பொருட்களில் வழங்கி வருகின்றன. மேற்சொன்ன சொல்லமைப்பு ஆய்வின் அடிப்படையில் அறம் என்னும் சொல்லிற்கு ஒழுக்கநெறிகளுக்குரிய விதிமுறைகளின் தொகுப்பு என இலக்கணம் கூறலாம்.

**அறம் பற்றிய வரையறைகள்**

தமிழர்கள் தம் வாழ்க்கையினை அறம், பொருள், இன்பம் என மூன்றாய் பகுத்தனர். அதில் அறத்திற்கே முதலிடம் கொடுத்து நாம் செய்யும் அறச்செயலின் மூலமே எஞ்சிய இரண்டையும் பெற முடியும் என்பதற்கிணங்க வாழ்ந்தும் காட்டியவர்கள் நம் சான்றோர்கள்.

அறம்பாடி ஒருவரை வாழவும் வைக்கலாம் தாழவும் வைக்கலாம் என்பது பண்டைய மரபு நந்திவர்ம பல்லவனை அவன் சகோதரன் அறம்பாடி கொன்றான் என்று நம் தொன்மை மரபுகள் எடுத்து இயம்புகின்றன. இங்கே காணலாகும் அறமானது தர்மம் அல்ல சதி ஆகும். ஆக அறம் பற்றிய கருத்தாக்கங்கள் பல்வேறு காலகட்டங்களுக்கு ஏற்ப பொருளானது மாட்சிமை அடைகிறது என்பது நாம் அனுமானிக்க வேண்டிய நிதர்சனமாகும்.

இதனையே மு.வ.அவர்களும், "பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இந்நான்கு குற்றங்களுக்கும் இடம்கொடுக்காமல் அவற்றை கடிந்து ஒழுகுவதே சிறந்த அறமாகும்.

இதனையே திருவள்ளுவரும்,

**"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**

**புறத்த புகழும் இல" (குறள்: 39)**

அறச்செயல்களைச் செய்தால் கிடைப்பதுதான் இன்பம் மற்றவற்றால் கிடைப்பது இன்பமும் இல்லை புகழும் இல்லை என்கிறார் வள்ளுவர்.

**அறம் என்ற சொல்லின் கருத்தாக்கங்கள்**

சங்ககாலப் புலவர்கள் தனிமனிதனையும் சமுதாயத்தையும் நெறிப்படுத்துவதே அறம் எனக் கருதினர். அதனாலே அறம் என்ற பொருண்மையில் வாழ்வின் ஒவ்வொரு செயலையும் சுட்டினர். வழக்கம், நீதி, கடமை, புண்ணியம், ஈகை, அறக்கடவுள் சமயம், முறை, நெறி, வழி என்ற பல்வேறு பொருள்களில் அறம் என்ற சொல் கையாளப்படுகிறது.

**நற்றிணையில் அறச்செய்திகள்**

தலைவனைப் பிரிந்து வாடிய தலைவி வாழ்க்கையின் உறுதிப்பொருள் பற்றிய சிந்தனையில் மனம் வருந்திக் கூறியதை,

**"தவறுபெயர்த்து அன்ன நில்லா வாழ்க்கை இட்டு**

**அகறல் ஓம்புமின் அறிவுடையீா் எனக்" (நற்:243,5,6)**

ஆடவர்கள் பொருள் ஈட்டும் வகையில் குடும்பத்தை நீங்கிச் செல்லுதலானது சூதாட்டத்திற்கு சமம் என்பதை இப்பாடல் வரிகள் சுட்டுவதன் மூலம் துணைவரைப் பிரிந்து போகாமல் இருந்து பேண வேண்டும் என்ற அறம் காக்கப்படுவதைக் காணமுடிகிறது.

**வாழ்க்கை நெறி**

மனிதர்கள் புகழ் மிகுந்து வாழ்வதும் இல்லற இன்பம் போல வாழ்வதும் மறுமைக்குரிய இன்பம் நல்கும். கொடைத்தன்மையோடு வாழ்வதும் ஆகிய வாழ்க்கை நெறி இப்பாடலின் வாயிலாக உணரமுடிகிறது.

**"இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்" (நற்:24:1)**

**புகழுடன் வாழ்தல்**

இத்தன்மையில் புகழ் கொண்டு வாழ்தலின் சிறப்பானது, புகழ் ஒழிய வாழ்பவர் வாழாதவரே என்னும் கருத்தில்,

**"வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய**

**வாழ்வாரே வாழா தவர்" (திருக்குறள்: 1240)**

**இல்லற இன்பம்**

இல்லற வாழ்வின் மேன்மையைப் புலப்படுத்துமாறு,

**"தாம்வீழ்வார் மென்றோள் தயிலின் இனிதுகொல்**

**தாமரைக் கண்ணான் உலகு" (திருக்குறள்: 1103)**

தலைமகளோடு கூடி இன்பம் அனுபவித்த தலைமகன் இவ்வின்பத்தை சொர்க்கம் என ஒப்பிட்டுக் கூறுகிறார்.

**கொடைத்தன்மை**

கொடைத்தன்மையானது மறுமை இன்பம் தரக்கூடியது என்பதனை,

**“ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**

**ஊதியம் இல்லை உயிர்க்கு” (திருக்குறள்:231)**

இல்லார்க்கு ஈந்து புகழ் பெறுதல் சிறந்த அறம் என்ற பொருளில் எடுத்தாளப்பட்டுள்ளது.

**தன்னைச் சார்ந்தோரைக் காத்தல்**

தன்னைச் சார்ந்தவர்களைத் துன்பம் நேராதவாறு பாதுகாத்தலும் இனியன செய்தலுமே சான்றோர்கள் அறம் என கருதினார். இதனை,

**“சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்**

**புன்கண் அஞ்சும் பண்பின்” (நற்:210,7-8)**

என்ற நற்றிணைப் பாடல் மூலம் அறமானது எடுத்து இயம்பும் சொல்லாட்சி வேண்டுமானால் மாறலாம். ஆனால் அறம் சார்ந்த செயல்பாடுகள் ஒன்றினை ஒன்று இணைப்பதாக அமைவதை அறியமுடிகிறது.

**மனைத்தக்க மாண்பு**

தாய் வீட்டில் செல்வத்தோடு வாழ்ந்தாலும் தன் கணவன் மனையில் உள்ள நிலைக்கு ஏற்ப ஒழுகுதலே மனைத்தக்க மாண்பு என்று அறக்கருத்து ஈண்டு உரைக்கப்படுவதை இப்பாடலின் மூலம் அறியலாம்.

**“கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்**

**கொடுத்த தந்தை கொழுந்நோறு உள்ளான்” (நற்:110,10-11)**

**கணவன் வழிநின்று ஒழுகும் பண்பு**

கணவன் வழி நின்று ஒழுகும் பண்பு நலம் மிக்க மனைவி என்னும் கருத்து இப்பாடல் வரியில் சுட்டப்படுகிறது.

**“நல்காய் ஆயினும் நயின்இல செய்யிதும்**

**நின் வழிப்படு உம்என் தோழி தன்னுதல்” (நற்,247:6-7)**

இதனை தலைவன் பொருந்தாத செயல்களைச் செய்தாலும் உன் உள்ளத்தின் தன்மைப் படியே நடந்து கொள்ளும் நற்பண்பை உடையவள் தலைவி என்பதில் நற்பண்பு என்ற அறம் கையாளப்பட்டுள்ளது.

இத்தகைய அறச்செய்திகள் நற்றிணையில் பரந்துப்பட்டு காணப்படுகின்றன.

**ஈரெழுத்து ஒருமொழி வடிவில் அறக்கருத்துக்கள்**

இரண்டு எழுத்துக்கள் சேர்ந்து பொருள் தரும் ஈரெழுத்து ஒரு மொழிகள் நற்றிணையில் அதிகமாக காணப்படுகின்றன. ஆனால் அவை இரண்டு எழுத்துக்கள் சேர்ந்த ஈரெழுத்து ஒருமொழி வடிவில் அறக்கருத்துக்கள் உணர்த்தும் சொற்கள் அரிதாகவே காணலாகின்றன. அவையாவன,

**“யாய் மறப்பு அறியா மடந்தை” (நற்:301:8)**

‘யாய்’ என்பது நற்றிணையில் ‘அன்னை’ என்னும் பொருளில் யாய் என்னும் ஈரெழுத்து ஒருமொழி இடம்பெற்றுள்ளது. இதில் யாய்-அன்னை என்பவள் தன் மகள் மீது காட்டும் பேரன்பினால் வரைவுதடைப்படுகிறது என்ற அறம் காக்கப்படும் நெறியில் கையாளப்படுகிறது. மேலும்,

“கண்ணொடு வாராஎன் நாரில் நெஞ்சே” (நற்:98:12)

நார் என்பது அன்பைக் குறிக்கும் அறநெறியில் நற்றிணைப் பாடலில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இப்பாடலில் தலைவன் தலைவி அன்பை குறிப்பிடுவதோடு அவற்றின் மற்றொரு வடிவம் அன்பு என்ற பொருளில் விளக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஈரெழுத்து ஒருமொழி வடிவிலும் அறக்கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன.

**நிறைவுரை**

சமூக போக்கிற்கு ஏற்ப இலக்கிய போக்கும் மாறி வருகின்றது. இம்மாற்றங்களே ‘அறம்’ என்ற பொருண்மையில் அன்புகாட்டல், உதவுதல், தீங்குசெய்யாமை, சினம் கொள்ளாமை, திருடாமை, சான்றோரை மதித்தல் போன்ற பல விதமாய் அறமானது பகுக்கப்பட்டுள்ளன. மேலும் நற்றிணையில் காணக்கூடிய ஈரெழுத்து ஒருமொழி வடிவில் காணலான அறக்கருத்தானது ஒரு புதிய முயற்சியாய் எடுத்தாளப்பட்டுள்ளன.

மேலும் நற்றிணையானது ஒரு அகநூல். ஆயினும் அதில் காணலாகும் ஒழுக்க நெறியான அறத்தைக் காத்தல் போன்ற கருத்தாக்கங்கள் அகவாழ்க்கை வேறு, அறவாழ்க்கை வேறு என்பதனை இலைமறை காயாகக் காணப்படுகிறது என்பதே இக்கட்டுரையின் முடிவாய் அமைகிறது.

# கு.அழகிரிசாமிசிறுகதைகள் காட்டும் கரிசல் நிலவாழ்வியல்

*ஜெ.அருண் குமார், முனைவர்பட்டஆய்வாளர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம், சென்னை-600 059.

ஒரு படைப்பாளன் தான் வாழ்வில் பெற்ற அனுபவங்களின் பிரதிபலிப்பாக படைப்பை உருவாக்குகிறான். இலக்கியங்கள் படைப்பாளனின் வாழ்வையும், அவன் காணும் சமூகத்தின் இயல்புகளையும் தன்னுள் கொண்டுள்ளன. அதன் அடிப்படையிலேயே பண்டையதமிழ் இலக்கியங்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலஅடிப்படையிலான சமூக அமைப்புகளைக் கொண்டு படைக்கப்பட்டன. இதனை ஒத்த பகுப்பு முறை நவீன தமிழ் இலக்கியங்களிலும் உள்ளது.அதனை வட்டார இலக்கியங்கள் என்பர். நவீன தமிழ் இலக்கிய வடிவங்களுள் ஒன்றான சிறுகதைகளும் நிலம் சார்ந்த வாழ்வைப் பேசுகின்றன. இம்மரபு புதுமைப்பித்தனிடம் தொடங்கி பலராலும் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, கரிசல் நில வாழ்வியலை கி.ராஜநாராயணன், ச.தமிழ்ச்செல்வன் போன்றோர் தம் கதைகளின் மையமாகக் கொண்டிருந்தனர். இவர்களுக்கு முன் கரிசல் நிலச்சூழலை தம் கதைகளில் அதிகம் பேசியவர் கு.அழகிரிசாமி ஆவார். அவர் தம் கதை விவரித்துள்ள கரிசல் நிலத்தை ஆவணப்படுத்தி ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கு.அழகிரிசாமி

மணிக்கொடிகாலத்தில் தமிழுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட சிறுகதை வடிவம், புதுமைப்பித்தன் வழி பல பரிசோதனை முயற்சிகளால் வளர்ந்தது. வட்டாரச் சிறுகதைகளின் தோற்றமும் புதுமைப்பித்தனிடம் இருந்தேதொடங்குகிறது. இதனை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியவர் கு.அழகிரிசாமி ஆவார். அவர் திருநெல்வேலி மாவட்டத்தை அடுத்த கோவில்பட்டி அருகேயுள்ள இடைச்செவல் என்னும் ஊரில் பிறந்தார். பள்ளிப்படிப்பை முடித்த அவர்,அரசுப் பணியில் சேர்ந்தார். பின்னர், ஆனந்தபோதினி, சக்தி, தமிழ் மணி,தமிழ் நேசன் (மலேசியா)போன்றபல இதழ்களில் ஆசிரியராகப்பணியாற்றினார். அவர்ஆனந்தவிகடன்,கல்கி,தாமரை,சுதேசமித்திரன்,கணையாழிபோன்ற இதழ்களிலும் கதைகள் எழுதியுள்ளார். அன்பளிப்பு,தவப்பயன்,சிரிக்கவில்லைமுதலியனஅவரதுசிறுகதைத் தொகுதிகளாகும். அவர்பலகட்டுரைகளையும் எழுதியுள்ளார். மொழிபெயர்ப்பு,பதிப்புப்பணிபோன்றபிறதுறைகளிலும் கு.அழகிரிசாமிஈடுபாடுகொண்டிருந்தார். அவர்தம் சிறுகதைகளில் நகரவாழ்க்கையின் அனுபவங்களையும்,கரிசல் நிலவாழ்வையும் கதைக்களங்களாகக் கொண்டிருந்தார்.தம் இளவயதுஅனுபவங்களின் வழி கரிசல் நிலச்சூழலைத்தம் படைப்புகளில் கு.அழகிரிசாமிவடித்தார்.

## கரிசல் இலக்கியம்

தமிழகத்தில் அரை நூற்றாண்டிற்குமுன்புஒருங்கிணைந்தநெல்லைமாவட்டத்தின் தென்பகுதிஊர்கள் "கரிசல் வட்டாரம்" என்றழைக்கப்பட்டன. அரசின் நிர்வாகவசதிக்காகநெல்லைமாவட்டம் பிரிக்கப்பட்டு,பலஊர்கள் தூத்துக்குடி,விருதுநகர்,தேனி,மதுரை,இராமநாதபுரம் ஆகியமாவட்டங்களில் சேர்க்கப்பட்டன. எனினும்,அவ்வூர்களின் நிலவியல் அமைப்பின் காரணமாக இன்றும்,அவைகரிசல் வட்டாரம் எனஅனைவராலும் அறியப்படுகின்றன. இப்பகுதிமக்களுக்குஉழவுத்தொழிலேமுதன்மைவாழ்வாதாரம் ஆகும். அதிகவெப்பம்

நிறைந்தகரிசல் பகுதியில் மழையைநம்பியேஉழவுத் தொழில் செய்யப்படும். கந்தகம் நிறைந்தநிலப்பகுதியாக இருப்பதனால்,பட்டாசுதொழிற்சாலைகளும் இங்குநிறைந்துள்ளன. அவ்வப்போதுபொய்த்துப் போகும் பருவமழையால்,கரிசல் நிலம் பெரும்பாலும் வறுமைக்கோலம் பூண்டிருக்கும். மக்கள் தங்கள் அன்றாடஉணவிற்கேஅவதியுறும் நிலை இங்கு இயல்பானஒன்றாகும். இவ்வாறுஉழவுத் தொழிலைப் பெரிதும் சார்ந்திருக்கும் கரிசல் பூமியின் உணர்வுகளையும்,துன்பங்களையும்,அழகியலையும் பேசும் இலக்கியங்கள் "கரிசல் இலக்கியங்கள்"எனப்படுகின்றன.

**கு.அழகிரிசாமிசிறுகதைகளில் கரிசல் நிலம்**

கு.அழகிரிசாமிபிறந்தஊரான இடைச்செவல் கரிசல் நிலப்பகுதியாகும். அப்பகுதிபெரும்பாலும் பருவமழையின்றிசீரற்றபொருளாதாரச் சூழலைக் கொண்டிருக்கும். வறுமையான சூழலில் மக்கள் தங்கள் வாழ்க்கையைநடத்துவதில் இருக்கும் இடர்ப்பாடுகளையும்,அவ்வப்போதுதோன்றும் மகிழ்ச்சியையும்,அவர்களின் குடும்பஉறவில் ஏற்படும் சிக்கல்களையும்,உணர்வுப் போராட்டங்களையும் கு.அழகிரிசாமிதம் கதைகளில் நுட்பமாகவெளிப்படுத்துகிறார்.

**தொழில்**

கரிசல் நிலப்பகுதிகளில் உழவுத்தொழிலேமுதன்மையானதாகும். அங்கிருக்கும் மக்கள் பெரும்பாலும் உழவர்களாகவோவிவசாயக் கூலிகளாகவோ இருப்பர். கரிசல் மண்ணில் கம்பு,பருத்திபோன்றவைபயிரிடப்படுகின்றன. உழவுத் தொழிலைஅடுத்து,கால்நடைமேய்த்தலும் அப்பகுதியில் மக்களின் வாழ்வாதாரமாகஉள்ளது. "பாலம்மாள் கதை" என்னும் சிறுகதையில் பாலம்மாள் என்றபெண்ணின் தந்தை இறந்ததும்,அவளதுதங்கையும் தாயும் விவசாயக் கூலிகளாகவேலைக்குச் செல்வதாககு.அ. பதிவுசெய்கிறார்.

**"தங்கம்மாளும் அவள் தாயாரும் தங்கள் வயிற்றுப் பாட்டுக்குவழக்கம் போலக் களையெடுப்பு,பருத்திஎடுத்தல்,பருத்திமார்பிடுங்குதல்,கதிர்அறுத்தல் போன்ற கூலிவேலைகளைசெய்துவந்தார்கள். ஏதாவதுஒருநாள் மழைபிடித்துக் கொண்டால் மறுநாள் காட்டுவேலைக்குப் போக முடியாது"[1]**

என்றுஉழவுத்தொழில் பற்றிக் குறிப்பிடுகிறார். "கிழவியின் லட்சியம்"என்றகதையில் கம்புபயிரிடுவதைப் பற்றி,

**"அந்தவருஷம் மழை இல்லை. சொந்தநிலத்தில் விதைத்தகம்புசாண் உயரப் பயிராகவளர்ந்து, இறுதியில் வைக்கோலாகிவிட்டது. ஊர் நிலங்கள் அனைத்துக்குமே இதேகதிதான் ஏற்பட்டது. பருத்திச் செடிகளிலிருந்துசகலபயிர்பச்சைகளுமேகொழுந்துகருகி,துவண்டுவாடின. அதனால் ஊராருக்குக் கூலிக்குகளைஎடுத்துப் பிழைக்கவும் வழியில்லை"[2]**

எனப் பதிவுசெய்கிறார். கரிசல் நிலத்தில் பயிரிடப்படும் கம்பு,பருத்திபோன்றபயிர்களும் அதிகவெப்பத்தால் கருகிப்போவதையும்,அதனால் மக்களின் வாழ்வில் ஏற்படும் பாதிப்புகளையும் கு.அழகிரிசாமிதம் சிறுகதைகளில் படம்பிடித்துக் காட்டுகிறார்.

உணவகம்,சிற்றுண்டிக் கடை,பலசரக்குக் கடை போன்றகடைகள் வைத்துவணிகம் செய்வதும் தொழிலாகஉள்ளதையும் "சுயரூபம்""முருங்கைமரமோகினி""தியாகம்",போன்றகதைகளில் கு.அழகிரிசாமிகுறிப்பிடுகிறார்.

**பொருளாதாரம்**

உழவுத்தொழில்,கால்நடைமேய்த்தல்,வணிகம்ஆகியதொழில்களைச் சார்ந்திருக்கும்கரிசல் நிலமக்களின் பொருளாதாரம் வறுமைநிறைந்ததாகவேஉள்ளது. தினமும் ஒருவேளைஉணவோ,கிழிசல் இல்லாதமாற்றுஉடையோ கூட இல்லாதஅளவிற்குக்கரிசல் பூமிஎங்கும் வறுமைநிறைந்திருப்பதாககு.அழகிரிசாமிதம் கதைகளில் சித்திரிக்கிறார்.

**"மாதக் கணக்கில் ஒருரூபாய்த் துண்டு இல்லாமல் அவளுடையகணவன் பட்ட கஷ்டத்தையும்,வீதிவழிப் போவதற்குக் கூசியதையும்,"ஒருதுண்டுவாங்க வழியில்லையே"**[3]என்றுகணவன் துயரத்துடன் வாய்விட்டுப் புலம்பியதையும் நினைத்துப் பார்த்தாள்"என்று "ராஜா வந்திருக்கிறார்" என்னும்கதையில் மாற்றுஉடைவாங்குவதற்குவழியில்லாதநிலையில்ஒருகுடும்பம் இருந்ததைத்தாயம்மாள் என்னும் மாந்தரின் உரையாடல் வழி கு.அழகிரிசாமிபுலப்படுத்துகிறார்.

**உணவு**

"கிழவியின் லட்சியம்',"ராஜா வந்திருக்கிறார்' போன்றகதைகளில் கரிசல் நிலமக்களின் உணவுபற்றியசெய்திகள் இடம் பெறுகின்றன. கம்பங்கூழ் அம்மக்களின் முக்கியஉணவாகஉள்ளது. பண்டிகைக்காலங்களில் அரிசிச்சோறு,தோசைபோன்றஉணவுகளைஅவர்கள் பயன்படுத்துவதாகப்பதிவுசெய்கிறார்.

**நம்பிக்கைகள்**

கிராமச் சூழலைக் கொண்டிருக்கும் கரிசல் பகுதிமக்கள் பல்வேறுநம்பிக்கைகளைக் கொண்டிருப்பதைகு.அழகிரிசாமிதம் கதைகளில் வெளிப்படுத்துகிறார். குறிப்பாக,சோதிடம்மீதானநம்பிக்கைஅப்பகுதிமக்களிடம் மிகுந்திருப்பதை,"வாத்தியாரம்மாள்' என்னும் கதையில்சித்திரிக்கிறார்.புதிதாகவந்தஒருபெண் ஆசிரியரிடம் மக்கள் ஆர்வமாகசோதிடம் பார்க்கக்காத்திருப்பதாகஒருநிகழ்வைஅமைக்கிறார்.கனவுகளின் மீதும் மக்கள் நம்பிக்கைகொண்டிருப்பதாகஒருநிகழ்வையும் இக்கதையில் படைத்துள்ளார்.

கரிசல் நிலமக்கள்கொண்டிருந்தகடவுள் நம்பிக்கையை"அக்கினிக் கவசம்" என்னும் கதையில் விவரிக்கிறார். தலைவன் குறிச்சிமற்றும் அதைசுற்றியுள்ள ஊர் மக்கள் மாரியம்மன் மீதுமிகுந்தநம்பிக்கைக் கொண்டுள்ளனர்என்பதை,

**"மகாசக்திவாய்ந்ததுடியானதேவதையைசுற்றுக் கிராமவாசிகள் எல்லோரும் தொட்டதற்கெல்லாம் நினைத்துக் கொள்ளுவார்கள் அற்பஉதவிகளையெல்லாம் செய்யும்படிகோரிமானசீகமாகப் பிரார்த்திப்பார்கள்."**[4]என்றுவிவரிக்கிறார்.

அக்கதையிலேயேபருவமழைபொய்த்ததற்கும்,ஊரில் நோய்கள் பரவுவதற்கும் மாரியம்மனுக்குதிருவிழாஎடுக்காதேகாரணம் எனமக்கள் நம்புவதையும் பதிவுசெய்கிறார்.

**விழாக்கள்**

மழையைப்பெரிதும் நம்பிவாழும் கரிசல் நிலமக்கள்மாரியம்மனுக்குத்திருவிழாநடத்துவதைப் பெரியவிழாவாகக் கொண்டாடுவர்.அவ்விழாபுதுப்பானையில் பொங்கல் வைத்து,வில்லுப்பாட்டு,கரகாட்டம் போன்றகலைநிகழ்ச்சிகளுடன்நடைபெறும்.இதனை"அக்கினிக் கவசம்"என்னும் சிறுகதையில்,

**"திருவிழாகோலாகலமாகஎன்றும் காணாதவிமரிசைகளோடுகொண்டாடப்பட்டது. மேளதாளங்கள்,வில்லுப்பாட்டு,கரகஆட்டங்கள்' இப்படிஒரேகும்மாளம்,சந்நிதிவாசலில் ஆயிரக்கணக்கானபானைகள் பொங்கி வழிந்தன"**[5]என்றுகு.அழகிரிசாமிவிவரிக்கிறார்.

**பழக்கவழக்கங்கள்**

தொலைந்துபோனபொருள்களைக் கண்டுபிடிக்க ஊர் மக்கள் அனைவருக்கும் கையில் ஒருசாணிஉருண்டைகொடுக்கப்படும். அதனைஅனைவரும் நீர்நிரப்பப்பட்டஒருவெண்கலப் பானையில் போடவேண்டும். அப்போதுதிருடியவர்தாம் திருடியபொருளைசாணிஉருண்டையுடன் சேர்த்துபோடுவர். இவ்வாறுதிருடப்பட்டபொருளைமீட்கும் பழக்கம் கரிசல் நிலப்பகுதிகளில் இருந்துள்ளதை"வாத்தியாரம்மாள்' என்றகதைஆவணப்படுத்துகிறது.

"முருங்கைமரமோகினி' என்றகதையில் முருங்கைக்காயைப்பிறர்திருடாமல் இருக்கஅதில் செருப்பைக் கட்டித் தொங்கவிடும் பழக்கத்தைகு.அழகிரிசாமிபதிவுசெய்கிறார்.

**முடிவுரை**

வறுமையும், சோகமும் நிறைந்தகரிசல் நிலவாழ்க்கையை கி.ராஜநாராயணன், ச.தமிழ்ச்செல்வன் போன்ற படைப்பாளிகள் படைத்துள்ளனர். எனினும், அவர்களுக்கு முன்னோடியாகத் திகழும் கு.அழகிரிசாமிகரிசல் நிலமக்களின் உணர்வுகளை நுட்பமாகத் தம் கதைகளில் படைத்துள்ளார். வறுமைச் சூழலிலும் அம்மக்கள் வாழ்க்கைமீது கொண்டிருந்த நம்பிக்கை, அவர்களது கொண்டாட்டங்கள், துன்பங்கள் போன்றவற்றை நடப்பியலோடு பதிவு செய்துள்ளார். தம் சொந்த ஊரான கரிசல் பூமியைப் பெரிதும் நேசித்த கு.அழகிரிசாமி அதனைத் தம் கதைகளின் வழி அனைவருக்கும் புலப்படுத்துகிறார்.

**அடிக்குறிப்புகள்**

- கு.அழகிரிசாமி, கு.அழகிரிசாமிகதைகள், ப.230
- மேலது, ப.598
- மேலது, ப.77
- மேலது, ப.120
- மேலது, ப.126

# புறத்திணையியல் காட்டும் வாழ்வியல் நெறிகள்

***சு.பாலசுந்தரி,** பதிவுஎண்: 17214014022085, முனைவர்பட்ட ஆய்வாளர், ம.சு.பல்கலைக் கழகம், திருநெல்வேலி.

**முன்னுரை**

எழுத்திலக்கணமும், சொல்லிலக்கணமும் மொழியின் விளக்கம். பொருளிலக்கணத்தில் கூறப்பட்டுள்ள செய்திகள் வாழ்வியலோடு பொருந்தி வருகின்றது. அகத்திணையியல் வீட்டு வாழ்க்கையைப் பற்றிக்கூறும். புறத்திணையியல் நாட்டுவாழ்க்கை, சமுதாய வாழ்க்கையைப் பற்றிக் கூறும். வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் ஆகிய ஏழும் புறத்திணைகளாகும். இவற்றுள் வெட்சி, வஞ்சி, உழிஞை, வாகை என்பன போர் பற்றிய செய்திகள் காஞ்சி நிலையாமை பற்றியும், பாடாண் அரசர்களைப் புலவர் பாடுகின்ற நிலைபற்றி கூறுவதாக அமையும் புறத்திணையியல் சமுதாய வாழ்க்கைப் பற்றியும், கொடை பற்றியும், புகழ் பற்றியும் பேசுகின்றது. இதனை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**போரின் துவக்கம்**

வெட்சித் திணையுடன் போர் நிகழ்வு துவங்குகிறது. மன்னன் பகைநாட்டிற்கு படையெடுத்துச் செல்வதற்கு முன் தன் வீரர்களுக்கு போதுமான அளவு படைக்கலன்களும் பயிற்சியும் அளிக்கிறான்.

> **“தன்னுறு தொழிலே வேந்துறு தொழிலென்**
> **றன்ன இருவகைத்தே வெட்சியென்ப”**

என்கிறார் தொல்காப்பியர். மன்னரது ஆணையின்படி பகைநாட்டு ஆநிரைகளைக் கவர்ந்து வருதல் மட்டுமின்றி படைவீரன் தானே தன் விருப்பப்படி தன்னுறு தொழில் மேற்கொண்டதை அறியமுடிகிறது.

**நம்பிக்கை**

மன்னன் போருக்குச் செல்வதற்கு முன் விரிச்சிக்கேட்டல் மரபாகும். தொல்காப்பியர் இதனை பாக்கத்து விரிச்சி என்கிறார்.

> **“குடக்கள் கொண்டுவா என்றார்**
> **குனிவில் தடக்கையால் வென்றி தரும்”**

என்ற வரிகளில் வீரன் ஒருவன் விரிச்சிக் கேட்கச்செல்லும் போது குடக்கள்ளினைக் கொண்டுவா என்று பெண் ஒருவள் கூறினாள் இதனால் போரில் வெற்றிகிட்டும் என்று மன்னனிடம் கூறுகிறாள்.

> **“உடல் வேந்து அடுக்கிய உன்னநிலை”**
>
> (தொல்.புறத்திணையியல் 5:8)

என்கிறார் தொல்காப்பியர்.

உன்ன நிலை (உன்னம்) என்பது போர்வீரர் நிமித்தம் பார்க்கும் ஒரு மரம் ஆகும்.

**பிறர் மண்ணைக் கவர்தல்**

ஒரு நாட்டு மன்னன் பிறநாட்டின் மீது மண்ணாசைக் கொண்டு போரிடுதல் வஞ்சித்திணையாகும்.

**“அடுத்து ஊர்ந்து அட்ட கொற்றத்தானும்”**

(தொல்.புறத்திணையியல்:6.4)

என்கிறார் தொல்காப்பியர். மெல்ல மெல்லவும், உறுதியாகவும் படையியங்கும் இயக்கத்தையும் இறுதியிற் பகைவரை வெற்றி கொள்ளுதலையும் பகைவரின் மண்கொள்ளுதலையும் குறிக்கின்றது. வென்றோர் விளக்கமும் தோற்றோர் தேய்வும் பாடப்பெறுகின்றன. அடுத்து வலிமை மிக்க வேந்தனால் பகைநாடு பெறும் அழிவுகுறித்து இரங்கும் வள்ளைப்பாட்டு நிகழ்கிறது. இறுதியாகப் பகைவரின் படைக்கருவிகளால் புண்ணுற்ற வீரர்களை அரசன் பேணுங்கடமை பற்றி கூறுகிறது.

சோழ மன்னன் ஒருவன் சேர, பாண்டிய மன்னர்கள் தனக்கு பணிய வேண்டும். தன் குடையொன்றே உயர்ந்து இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தன் வாழ்நாள் முழுவதும் பாசறையிலே தம் வாழ்க்கையைச் செலவிட்டார். அம்மன்னன் சோழன் நலங்கிள்ளி என்ற செய்தியை கோவூர் கிழார் பாடலில் காணலாம்

**“சிறப்புடை மரபின் பொருள்ளும் இன்பமும்**

**அறத்து வழிப் படுஉம் தோற்றும் போல**

**இருகுடை பின்பட ஓங்கிய ஒருகுடை**

**….. ….. ….. ….. ……**

**நெஞ்சு நடுங்கு அவலம் பாயத்**

**துஞ்சாக் கண்ண வடபுலத்து அரசே”** (புறம்:31)

இப்பாடலின் மூலம் அவர் கைப்பற்ற ஆசைப்பட்ட நாடுகள் காட்டுப் பகுதிக்கு இடைப்பட்டவை வெகு தொலைவின நீ பாசறையில் அல்லாமல் வேறு மாளிகையில் தங்கமாட்டாய். உன் படைகள் அங்கு செல்ல மறுப்பதற்குப் பதிலாக மனமகிழ்ந்து உனக்கு முன் செல்லும். நீ வடபுலத்து வருவாய் எனத் தடுமாறி மனம் நடுங்குகிற வடபுலத்து அரசர்கள், உறங்காத கண்களை உடையவர் ஆவர் என இப்பாடல் அவனின் வீரத்தன்மையையும் பேராசையையும் சுட்டியுள்ளது.

**நிலையாமை**

காஞ்சி இம்மை வாழ்வின் நிலையாமையையும் இவ்வுலகத்தின் அழியும் இயல்பை விளக்குகிறது. யாக்கை, இளமை, செல்வம் ஆகியவற்றால் நிலையேறில்லாத இவ்வுலக வாழ்க்கையில் நேரும் பலவகைத் துன்பங்களை பொறுத்து நிற்றல் காஞ்சித்திணையாகும். இதுவே துன்பங்களைக் கண்டு பின்னுக்குச் செல்லாமல் அதனை எதிர்த்து நிற்கும் நிலையை உணர்த்துகிறது.

காஞ்சித் திணையில் புண்பட்ட வீரன் தன் புண்கிழித்து மடிதல் யாராலும் காக்கப்படாத புண்பட்ட வீரரைப் பேய் காத்தலும் அவ்வீரரின் மனைவி பேய் அணுகா வண்ணம் கணவன் உடலைப் போற்றுலுமாகிய போர்ச்செய்திகள் கூறப்பெறுகின்றன.

இத்திணையில் மகட்பாற்காஞ்சி என்றொரு துறையுள்ளது. நாட்டை ஆளும் அரசன் மறக்குடி சார்ந்த ஒரு பெண்ணின் மீது காதல் கொண்டு அவளை மணக்க விழையலாம். ஆனால் அப்பெண்ணின் தந்தை அதனை மறுக்கக்கூடும். இதனால் சினமுற்ற அரசன் அவ்வூர்களின் மேற் படையெடுத்து அவ்விடங்கள் முழுமையும் அழிக்கக்கூடும். அவ்வூர் மக்கள் அழிவின் காரணமாயினள் அப்பெண் எனப்பழி தூற்றுவர். மேலும் கணவன் மனைவி ஆகிய இருவரும்

ஒருவர் மற்றொருவர் இறப்பில் எய்தும் துன்பங்களும் கணவன் மாய்ந்தபின் எரிபுகும் மனைவியின் துயரும் கூறப்பெறுகின்றன.

**கொடைச்சிறப்பு**

பாடாணின் முதன்மைப் பாடுபொருள் வென்றோரைப் புகழ்வதாம். அரசர்களின் புகழை இரவலராகிய புலவர் போற்றுதலைக் குறிக்கின்றது. வாழிபாடுகள், வாழ்த்துரைகள், வேள்வியைப் போற்றிப் பாடுதல் ஆகியனவும் பாடாண் திணைக்குள் அடங்குவன.

மன்னர்கள் வறுமையால் வாடும் புலவர்களுக்கு பொருள்களைக் கொடுத்து அவர்களின் வறுமையைப் போக்கி உள்ளனர். மன்னனது புகழ், கொடை, கல்வி போன்ற சிறப்புத் தன்மையினை பாடாண்திணையில் விளக்குகிறார் தொல்காப்பியர் வள்ளல்களைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

**"பாரி பாரி யென்றுபல ஏத்தி**
**ஒருவர் புகழ்வர் செந்தாப் புலவர்**
**பாரி ஒருவனும் அல்லன்**
**மாரியும் உண்டீண்டு உலகுபுரப் பதுவே"** (புறம் 107)

**முடிவுரை**

பண்டைய தமிழரின் வாழ்வியற் நெறிகளை உணர தொல்காப்பிய புறத்திணையியல் நூற்பாக்கள் உறுதுணை புரிகின்றன. நற்சொல் கேட்டல் நாள் பார்த்தல், வாகை சூடல், வெற்றி பெற்றோரைப் பாராட்டல், நிலையாமையை உணர்தல், கொடை அளித்தல் என போர் நெறிகள் முறையாக முழுமையானதாக வாழ்வியலோடு இணைந்து நிற்றலை உணர முடிகிறது.

**பார்வை நூல்கள்**


1) தொல்காப்பியம் பொருளதிகாரம் - இளம்பூரணனார் உரை, சாரதா பதிப்பகம் சென்னை – 600 014, முதற்பதிப்பு–2005.

2) தொல்காப்பியம் உரைவளக்கோவை - அறிஞர் ச.வே.சுப்பிரமணியன் மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் -608001 முதற்பதிப்பு – 2009.

3) சங்கமரபு - தமிழண்ணல், மீனாட்சி புத்தக நிலையம் மதுரை – 625 001, முதற்பதிப்பு – 2009.

# அறநெறிச் சாரத்தில் அறச் சிந்தனைகள்

*முனைவர் பெ.சாமிதாஸ், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஊரீசு கல்லூரி, வேலூர் - 632001.

**முன்னுரை**

அறம் என்ற சொல் 'ஆறு' என்ற வினைச்சொல்லின் அடியாகப் பிறந்தது. இச்சொல் அறுத்து செல், வழியை உண்டாக்கு, உருவாக்கு, தூண்டு, வேறுபடுத்து என்ற பல்வகைப் பொருளை வழங்கி வருகின்றன. ஆராய்ச்சியின் அடிப்படையில் மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் முழுத்தொகுதியே 'அறம்' என்பர். பிறவிதோறும் மனிதனைப் பற்றிக்கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே 'அறம்' என்று ஆன்மிகம் விளக்கம் தருகிறது.

தமிழ் இலக்கியங்கள் ஒழுக்கம், தருமம், நீதி, வழக்கம், புண்ணியம், அறக்கடவுள் என்று பல்வேறு பொருளையும், அகராதி தருமம், கற்பு, நல்வினை, கடமை, நோன்பு போன்ற பொருளையும் குறிப்பிடுகின்றன.

அறம் என்னும் சொல் பரந்துபட்ட பொருளை உடையதாயினும், ஒரு குறிப்பிட்ட நெறிமுறைகளை உண்டாக்கி அவ்வரையறைக்குள் வாழ்வதும் அறம் எனப் பெயர் பெறும். நடைமுறை வாழ்வில் அறம் என்பது 'தருமம்' என்பதைக் குறிக்கிறது. 'அறம் செய விரும்பு' என்று ஔவையார் கூறுவதும் 'தருமத்தையே' ஆகும்.

எனவே மனித சமுதாயம் சிறக்கத் துணை செய்யும் அறத்தின் இன்றியமையாமையும், அறத்தின் சிறப்பையும் மனித இனம் மேற்கொள்ள வேண்டிய அறச்செயலினையும், அறநெறிச் சாரத்தின் வழி நின்று உரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சிறந்த அறங்கள்**

**'மெய்ம்மை பொறையுடைமை மேன்மை தவ அடக்கம்**
**செம்மை ஒன்றின்மை, துறவுடைமை - நன்மை**
**திரும்பா விரதம் தரித்தலோடு இன்ன**
**அறம் பத்தும் ஆன்ற குணம்'[1]**

வாய்மை, பொறுமை, மேன்மை, முயற்சி, பணிவு, கோணலில்லா மனம், தன்னலம் இன்மை, துறவுடைமை, நன்மை, முறையான நோன்பு மேற்கொள்ளல் ஆகிய பத்து குணங்களும் சிறந்த அறங்களாக சுட்டுகிறார் முனைப்பாடியார். வள்ளுவர் இதனை அறன் வலியுறுத்தல் என்ற தலைப்பில்,

**'அழுக்காறு அவாவெகுளி இன்னாச் சொல் நான்கும்**

**இழுக்கா இயன்றது அறம்'[2]**

பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடுக்காமல் அவற்றைக் கடித்து ஒழுகுவதே அறமாகும் என்கிறார்.

**சிறந்த தானம்**

‘தானத்தில் சிறந்த தானம் அன்னதானம்’ என்பர். ஏனெனில் மனிதனுக்கு வேறு எந்தப் பொருளைக் கொடுத்தாலும் அவனுடைய மனம் நிறைவதில்லை. உணவு ஒன்று மட்டும்தான் மனிதனின் மனதையும், வயிற்றையும் ஒருசேர நிறைவடையச் செய்கிறது. எனவேதான் உணவு அளிப்பது சிறந்த அறமாகக் கருதப்படுகிறது.

**‘அறம் எனப்படுவது யாது எனக் கேட்பின்**
**மறவாது இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது**
**கண்டதில்...**
**வாழ்நாள் உடம்பு வலிவனப்புச் செல்கதியும்**
**தூமான் நினைவு ஒழுக்கம் காட்சியும் தாமாண்ட**
**உண்டி கொடுத்தான் கொடுத்தலால் ஊண்கொடையோடு**
**ஒன்றும் கொடை ஒப்பது இல்’[3]**

ஒருவனுக்கு உணவு அளிப்பவன் அவனுக்கு வாழ்நாளையும், உடல், வலிமையும், அழகையும் நற்கதியையும், சிறந்த பெருமையினையும், நல்ல எண்ணங்களையும், ஒழுக்கத்தையும், நல்ல அறிவினையும் அளிப்பவன் ஆகிறான். எனவே பசித்தவர்க்கு உணவு அளிப்பதே சிறந்த தானமாக அறநெறிச்சாரம் உணர்த்துகிறது.

இந்த உலகில் ஒருவர் உயிர் வாழ உறுதுணையாய் அமைவது உணவாகும். எந்த ஒருவனுடைய முயற்சியும் உணவைத் தேடுவதிலேயே அமைவதைக் காணமுடிகிறது. எனவேதான் பாரதியார்.

**‘வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும்; இங்கு**
**வாழும் மனிதருக்கு எல்லாம்’**

என்று பாடினார். திருமூலர் ‘யாவர்க்குமாமம் உண்ணும்பொது ஒரு கைப்பிடி’ என்றார். புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன்,

**‘பசி என்று வந்தவர்க்குப் புசி என்று**
**ஒரு பிடி கொடுத்துப் பாரப்பா’[1]**

என்றார். தாயுமான தயாபரர்,

**‘யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்**
**உறங்குவதுமே யல்லால் வேறொன்றயியேன் பராபரமே’[4]**

என பாடினார். ஆகவே தானத்தில் சிறந்த தனம் ‘அன்னதானத்தைவிட வேறு எதுவும் இல்லை என அறியமுடிகிறது.

**இளமை முதற்கொண்டே அறம் செய்க**

மனித வாழ்க்கை என்பது பிறப்புக்கும், இறப்புக்கும் இடைப்பட்டது, நிலையில்லாதது. இத்தகைய நிலையாமையாகிய வாழ்வில் என்றும் நிலைத்திருக்கும் அறத்தினை செய்தல் வேண்டும். அதை காலம் தாழ்த்தியல்ல, முதிற்பருவத்தில் அல்ல தன்னுடைய இளமைப்பருவத்தில் இருந்தே செய்தல் வேண்டும் என்பதை,

**‘இன்டிசால் விளைநிலமா ஈதலே வித்தாக**
**வன்சொல் களைகட்டு வாய்மை எரு அட்டி**
**அன்பு நீர் பாய்ச்சி அறக்கதிர் என ஓர்**
**பைங் கூழ் சிறுகாலைச் செய்’[5]**

இனிய சொல்லையே விளை நிலமாகக் கொண்டு, அதில் ஈகைத் தன்மையை விதையாக விதைத்து கடுஞ்சொற்களாகிய களையினை நீக்கி, உண்மை பேசுதல் என்னும் எருவினைத் தூவி, அன்பாகிய நீரைப் பாய்ச்சி, அறமாகிய கதிரை விளைவாக பெறுவதற்கு பசுமையானப் பயிரைச்

செய்ய வேண்டும் அதை இளமைக் காலத்திலிருந்தே செய்தல் வேண்டும் என்று அறநெறிச்சாரம் உணர்த்துகிறது.

இளமையும், நாம் தேடி வைத்த செல்வமும் நம்மிடையே நிலைத்திருக்கப் போவதில்லை. எனவே செல்வம் இருக்கும் காலத்திலேயே வாழ்நாட்கள் வீணாக விரைந்து கழிவதை நிறுத்தி இளமைக் காலம் முதற்கொண்டே அறம் செய்தல் வேண்டும் என்ற கருத்தினை,

**'நின்றன நின்றன நில்லா என உணர்ந்து**
**தோன்றின ஒன்றின வல்லே செயின் செய்க**
**சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்**
**வந்தது வந்தது கூற்று'**[6]

நாலடியார் பாடல் உணர்த்துகிறது. அறத்தை செய்வதற்கு காலத்தையும், நேரத்தையும் பார்க்காமல், இப்போதைக்கென்ன அவசரம், பிறகு செய்யலாம் என்ற தள்ளிப்போடாமல் அறச் செயல்களை அன்றே செய்தல் வேண்டும், அவ்வாறு செய்கின்ற அறமே உயிர் பிரியும் காலத்து புகழோடு காத்து நிற்கும் என்பதை வள்ளுவர்,

**'அன்றறிவாம் என்னாது அறம் செய்க: மற்றது**
**பொன்றுங்கால் பொன்றாத் துணை'**[7]

என்ற குறள் வாயிலாக உணர்த்துகிறார்.

**'காலைச் செய் வோமென்று அறத்தைக் கடைபிடித்துச்**
**சாலச் செய் வாரே தலைப்படுவார் - மாலைக்**
**கிடந்தான் எழுதல் அரிதால் மற்று என்கொல்**
**அறம் காலை செய்யாத வாறு'**[8]

என்ற பாடலின் வழியாக இளமைப் பருவத்திலிருந்தே, அதுவும் காலையில் எழுந்தவுடனே அறச்செயல்களை செய்வோம் என்று உறுதிக்கொண்டு செய்பவரே அறம் செய்பவராகவும், உயர்ந்தவராகவும் கருதப்படுவர். ஏனெனில் இரவில் படுத்தவன் காலையில் எழுவான் என்பது நிச்சயம் இல்லை எனவே நல்லறங்களை செய்தல் வேண்டும் என்கிறார் முனைப்பாடியார்.

**பகிர்ந்து உண்ணல்**

நாம் மட்டும் உண்டு உயிர் வாழ்தல் நல்லறமும் கிடையாது, சிறப்பான வாழ்வும் ஆகாது. வறுமையில் இருந்தாலும் வசதியாய் வாழ்ந்தாலும் நம்முடைய உணவை பிறருடன் பகிர்ந்து உண்ணுவதே நல்லறமாகும். அவ்வாறு பிறருடன் பகிர்வதால் அவருடைய பசி ஆறும், அவரும் உயிர் வாழ்வார். எனவே நாம் மட்டும் உண்டு பிறர் பசியால் இறந்தால் அது பாவமாகும்.

**'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'**[9]

என உணர்த்துகிறார் வள்ளுவர்.

**'பட்டார்ப் படுத்து படாதார்க்கு வாள் செறிந்து**
**விட்டொழிவது அல்லால் அவ்வெங்கூற்றம் - ஒட்டிக்**
**கலாய் கொடுமை செய்யாது கண்டது பாத்து உண்டல்**
**புலால் குடிலால் ஆன பயன்'**[10]

அறம் செய்யாமல் தோன்றும் பட்டாரை காலன் கொல்வான். அப்படி தோன்றாமல் அறம் செய்பவரைக் கண்டால் காலன் உயிர் கொல்லும் தன் வாளை உறைக்குள் வைத்துக்கொண்டு கொல்லாமல் விட்டுவிட்டுப் பொய்விடுவான். இப்படி காலன் கலகம் செய்து கொடுமைப்படுத்தாமல் இருக்க புலால் குடிசையாகிய உடம்பினைப் பெற்றதன் பயனாக ஒருவன் தன்னிடம் உள்ளதைப் பகுத்து உண்ணுதல் வேண்டும் என அறநெறிச் சாரம் அறிவுறுத்துகிறது. பகுத்துண்டு வாழ்தல் என்பது மிகுதியாக பகுத்து வழங்குதல் அன்று. நாம் உண்ணும் உணவில் ஒரே ஒரு பிடியாவது மற்றவர்களுக்கு பகுத்து உண்டு வாழ்தல் வேண்டும். இதனைத் திருமூலர்,

'யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானெ'[11]

எனக் கூறுகிறார். நம்முடைய வாழ்வின் செயல்பாடுகளை, பாதைகளை செம்மைப்படுத்தி நம்மை நாடி வருபவர்களின் மனம் வருந்தாதபடி அவர்களுக்கு நல்ல உணவு தந்து பகுத்து உண்டு வாழ்பவன் கடலால் சூழப்பட்ட இம்மண்ணுலகில் அரசனாக விளங்குவான் என்ற கருத்தை,

'ஈத்துண்பான் ஆகும் இருங்கடல் சூழ் மண்ணரசாய்ப்
பாத்துண்பான் ஏத்துண்பான் பாடு'[12]

என ஏலாதி விளம்புகிறது.

**முடிவுரை**

அறநெறிச்சாரமம் குறிப்பிடும் பத்து சிறந்த அறங்களைப் பற்றியும், தானத்தில் சிறந்த தானம் 'அன்னதானம்' என்பதும், இளமையும், வாழ்வும் நிலையானது அல்ல என்பதை எண்ணி இளமையிலிருந்தே அறம் செய்தல் வேண்டும், இந்த அறங்களைச் செய்வதற்கு நாட்களைக் கடத்தாமல் இன்றே இப்பொழுதே செய்ய வேண்டும் என்ற சிந்தனையை அறநெறிச்சாரம் எடுத்தியம்புகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. அறநெச்சாரம், பா.எ.12
2. குறள் எண்.35
3. முன்னது, பா.எ.177
4. வாழ்வியல் நெறிகள், ப.11
5. முன்னது, பா.எ.16
6. நாலடியார், பா.எ.4
7. குறள் எண்.36
8. முன்னது, பா.எ.17
9. குறள் எண்.322
10. முன்னது, பா.எ.172
11. திருமூலர், திருமந்திரம், பா.எ.898
12. ஏலாதி, பா.எ.44

# கொன்றைவேந்தன் சுட்டும் வாழ்வியல் சிந்தனைகள்

***கு.கங்காதேவி,** முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்ப் பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

**முன்னுரை**

அகிலமெலாம் ஒளிபெறச் செய்யும் ஆதவன் போல மனிதகுலம் மாண்புற வாழ்வு சுடர் விளக்காய் திகழ்வது நீதிநூல்கள் ஆகும். இந்நூல்கள் தனிமனிதன், ஒவ்வொருவரும் எவ்வாறு வாழவேண்டும் என்பதனைக் குறிக்கின்றன. நீதிநூல்களில் ஒன்றாகிய ஔவையார் எழுதிய கொன்றைவேந்தனில் வாழ்வியல் குறித்த சிந்தனைகள் பொதிந்து கிடக்கின்றன. அவற்றைப் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றன.

**அறன் வலியுறுத்தல்**

வாழ்வில் அறம் என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகத் திகழ்கிறது. தமக்கும், பிறர்க்கும் இன்பத்தை மட்டுமே அளிக்கக்கூடியது அறமாகும். அறநூலில் சொல்லப்பட்ட முறைகளைத் தெரிந்து அதன்படி நல்வழியில் நடக்க வேண்டும் என்பதை,

**“நுன்முறை தெரிந்து சீலத்தொழுகு” (கொ.வே.55)**

என்ற அடியின் மூலம் அறியலாம். நீதிநூல்களை படிக்காதவர்களுக்கு நல்லொழுக்கம் அறிவு இருக்காது என்பதை,

**“ஓதாதவர்க்கு இல்லை உணர்வோடு ஒழுக்கம்” (கொ.வே.91)**

என்ற அடியின் வழி அறியலாம்.

**கடவுளை வணங்குதல்**

கோவிலுக்குப் போய் இறைவனை வணங்குவது மிகவும் நன்மை தரும் என்றும் தினமும் வணங்க வேண்டும் என்பதனை,

**“ஆலயம் தொழுவது சாலவும் நன்று” (கொ.வே.2)**

**“வைகல் தோறும் தெய்வம் தொழு” (கொ.வே.89)**

என்ற அடியின் வழியாக அறியலாம்.

தவம் செய்வோர்க்குச் சிறப்பு சிவபெருமானை துதித்து வழிபாடு செய்ய வேண்டும் என்றும், கடவுளின் கோபத்துக்கு ஆளானால் கைவரப்பெற்ற தவம் அழிந்து போகும் என்பதனை,

**“சிவந்தைப் பேணல் தவத்திற்கு அழகு” (கொ.வே.28)**

**“தெய்வம் சீறீன் கைதவம் மாம்” (கொ.வே.43)**

என்ற அடியின் வாயிலாக அறியலாம்.

**தாய் - தந்தையரை மதித்தல்**

தாய் தந்தையர் தான் முதல் கண்கண்ட கடவுள் என்பதனை,

**“அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்”**

என்ற அடியின் வாயிலாக அறியலாம். தாயைக் காட்டிலும் அதற்கு மேலான கோயில் எதுவுமே இல்லை என்றும், தந்தை கூறும் அறிவுரைக்கு மிஞ்சிய சாஸ்திரம் வேறு இல்லை என்பதனை

**“தந்தை சொல் மந்திரம் இல்லை”** (கொ.வே.37)

**“தாயிற் சிறந்த கோயிலும் இல்லை”** (கொ.வே.38)

என்ற அடியின் வாயிலாக அறியலாம்.

**கணவர் - மனைவி - இயல்பு**

ஒரு ஆணும், பெண்ணும் திருமணத்தால் இணைக்கப்பட்டு ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து நல்ல துணையாளர்களாக வாழும் போது தான் ஒரு நல்ல குடும்பம் உருவாகிறது. கணவன் மனைவியர் எவ்வாறு இல்லறத்தைச் சிறப்பிக்க வேண்டும், எவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டும் என்பதனையும் ஒளவையார் பல அடிகளில் விளக்குகிறார். மனவைியோடு சேர்ந்து வாழ்வது நல்வாழ்வு இல்லாவிடில் நல்வாழ்வு ஆகாது என்பதனை,

**“இல் அறம் வல்லது நல் அறம் அன்று”** (கொ.வே.3)

என்று குறிப்பிட்டுள்ளார். இதனையே மனைவியுடன் வாழாமல் அவளைத் தள்ளி வைத்துத் திரியாதே என்பதனை,

**“வாழாமல் பெண்ணை வைத்துத்திரிய வேண்டாம்”**

என்று உலக நீதி குறிப்பிடுகின்றது. ஒருவனைக் கணவனாகத் தேர்ந்தெடுத்து ஒரு வீட்டிலேயே அவனுடன் வாழவேண்டும் என்பதனை,

**“ஒருவனைப் பற்றி ஓரகத்து இரு”** (கொ.வே.10)

என்ற அடியின் மூலம் அறியலாம். கணவன் சொற்படி நடப்பதே பெண்களுக்கு அழகாகும் என்பதனை,

**“கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை”** (கொ.வே.14)

என்பதன் மூலம் அறியலாம். ஒழுக்கத்தோடு தங்களை தாங்களே காத்துக் கொள்வதே பெண்களுக்கு உரிய சிறப்பு என்பதனை,

**“காவல் தானே பாவையார்க்கு அழகு”** (கொ.வே.15)

என்ற அடியால் அறியலாம். கணவனுக்கு எதிர்பாராத துன்பம் நேரிட்ட பொழுது துடிதுடிக்காத மனைவியானவள் வயிற்றில் கட்டி வைத்துள்ள நெருப்புப் போன்றவள் என்பதனை,

**“துடியாய் பெண்டீர் மடியில் நெருப்பு”** (கொ.வே.41)

என்ற அடியின் மூலம் அறியலாம். அவதூறுகளையே பேசித் திரியும் பெண் கணவனுக்கு எமன் போன்றவள் என்பதனை,

**“தூற்றும் பெண்டீர் கூற்று எனத்தரும்”** (கொ.வே.42)

என்ற அடியின் வழியில் புலனாகும். இதுபோன்று கணவனும், பிறர் மனைவியிடம் இச்சை வைத்து அங்கே போகாமல் இருப்பதே சிறந்த ஒழுக்கநெறி என்பதனை,

"பிறன்மனை புகாமை அறம் எனத் தகும்"

என்ற அடியின் வாயிலாக அறியலாம். இதுபோன்று கண்ணால் மயக்கும் பொதுமகளிரின் வீட்டின் பக்கத்திலே கூட போகாமல் இருப்பது நன்மை என்பதனை,

"மைவிழியார் தம் மனை அகன்று ஒழுகு" (கொ.வே.78)

என்ற அடியின் வழியாக அறியலாம். இதனையே ஆத்திச்சூடியும்,

"மை விழியார் மனை அகல்" (ஆ.சூ.95)

என்று குறிப்பிட்டுள்ளார். செல்வத்தில் தலையாய செல்வம் மக்கட் செல்வமாகும் பரம்பரை விளங்குவதற்கும் குடும்பம் வாழையடி வாழையாக வாழ்வதற்கு மக்கட் செல்வத்தோடு வாழவேண்டும் என்பதனை,

"சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை"

என்றும் குறிப்பிடுகின்றார்.

**இன்னா செய்தல்**

பிற உயிர்க்குத் துன்பம் செய்தலைக் கைவிட வேண்டும். பிறருக்குக் காலையில் துன்பம் செய்தால், மாலையில் அவனைக் கேடு வந்து சூழ்ந்து கொள்ளும் என்னும் கருத்து,

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" (கொ.வே.பா.74)

என்னும் அடியின் வழி புலனாகிறது. இப்பாடல்

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்"

என்னும் குறட்பாவின் கருத்தைப் பிரதிபலிப்பதாக உள்ளது. தீமையான செயல்கள் எல்லாவற்றையும் அகற்றிவிட வேண்டும் என்பதை,

"பொல்லாங்கு என்பது எல்லாம் தவிர்" (கொ.வே.பா.68)

என்ற அடியின் வழி அறியலாம். தீங்கு செய்தவருக்குப் பதிஒக்குத் தீங்கு செய்யாமல் மன்னித்து விடுவது சிறந்த செயலாகும் என்பதை,

"கெடவது செய்யின் விடுவது கருடம்"

என்ற அடியின் மூலம் அறியலாம்.

**புறங்கூறாமை**

ஒருவர் எவ்வளவு சிறந்த பண்புடையவராகக் காணப்பட்டாலும், அவரிடம் புறங்கூறல் என்ற ஒன்று இருப்பின் மிகவும் இழிவுடையவராகவே கருதப்படுவார். பிறர்பால் சொல்லக்கூடாத மொழிகளைப் புறங்கூறுபவன் உயர்ந்த ஒழுக்கமும், பண்பும் இல்லாதவன் ஆவான். மேலும் எல்லோரிடமும் விரோதம் ஏற்படும். இதனையே,

"கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை" (கொ.வே.பா.25)

என்ற அடியின் வாயிலாக அறியலாம். புறங்கூறுவதை விரும்பிக் கேட்பவர் காதிலே மேலும் கோள் மூட்டிவிட்டால் காற்றும் நெருப்பும் பற்றி எரிவது போலாகும் என்பதனை,

"கோள் செவிக் குறளை காற்றுடன் நெருப்பு" (கொ.வே.பா.24)

என்ற அடியின் மூலம் அறியலாம்.

**சினம் தவிர்த்தல்**

சினம் என்பது ஒரு மனிதன் தன்னைத் தானே அழித்துக் கொள்ளுவதற்கு வழி செய்கின்றது. நாம் அடையும் துன்பத்திற்கு சினமே காரணமாகும். எனவே சினத்தை அடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும்,

**"தீராக் கோபம் பேரராய் முடியும்" (கோ.வே.பா.40)**

தணியாத சினம் பெரிய சண்டையில் கொண்டும் நிறுத்தும் என்பதனை இவ்வடியின் மூலம் அறியலாம். இதனையே ஆத்திச்சூடியிலும்,

**"ஆறுவது சினம்" (ஆ.சூ.2)**

என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**பொறாமை**

பொறாமை என்பது மனிதரை உயிரோடு எரிப்பதற்குச் சமமான ஒரு நோய் ஆகும். பொறாமையை நீக்கி வாழ்வதே உன்னதமான வாழ்க்கைக்கு அடிப்படையாகும். மேலும் பிறர்மீது பொறாமை படும் போது நம்முடைய செல்வமும் அழிந்து போகும் என்பதை,

**"ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அறிவு" (கொ.வே.12)**

என்ற அடியின் வாயிலாக அறியலாம். இதனையே ஆத்திச்சூடியிலும்,

**"ஔவியம் பேசேல்" (ஆ.சூ.12)**

என்றுரைக்கிறார். மேலும் பொறாமை என்ற ஒன்று மனது சம்பந்தப்பட்ட ஒன்று. தூய்மையான மனத்தவர்க்கு வஞ்சக நினைப்பு எழாது என்பதனை,

**"வெள்ளை இல்லை கள்ளச் சிந்தை" (கொ.வே.87)**

என்ற அடியின் வழியாக அறியலாம்.

**கூடா நட்பு**

ஒருவருடன் நாம் பழகிய சிறிது காலதிலேயே அவருடைய குணாதிசயங்களை ஒரு குறிப்பிட்ட அளவாவது நம்மால் அறியமுடியும். தீயகுணம் உள்ளவரிடம் நாம் நட்பை வலுப்படுத்திக் கொள்ளக்கூடாது என்றும் அது பெருந்துன்பத்தைத் தரும் என்பதனை,

**"நல்லிணக்க மல்லது அல்லற் படுத்தும்" (கொ.வே.48)**

என்ற அடியின் மூலம் அறியலாம்.

**முடிவுரை**

ஔவையார் எழுதிய கொன்றை வேந்தன் நூலில் ஒரு மனிதன் எவ்வாறு வாழவேண்டும், வாழக்கூடாது என்பதற்கிணங்க பல்வேறு வாழ்வியல் குறித்த சிந்தனைகள் பொதிந்து கிடக்கின்றன. இந்நூலை படிப்பதன் வாயிலாக அவற்றில் கூறிய கருத்துகளை தம் வாழ்வில் பயன்படுத்தி மேலோங்கிச் செல்ல வேண்டும். அப்போது தான் வாழ்வில் வெற்றிபெற முடியும்.

# புறநானூற்று குறுநிலமன்னர்களின் கொடைத்திறம்

***மு.கலைச்செல்வி,** முனைவர் பட்ட ஆய்வாளர், ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சேலம்.

**முன்னுரை**

சங்க காலத்தில் வாழ்ந்த மன்னர்களும், குறுநில மன்னர்களும் புலவர்களுக்கு பரிசு அளிப்பதில் சிறந்து விளங்கினர். இருப்பவர் இல்லாதவர்க்கு இரந்து இயைந்து கொடுப்பதே கொடையாகும். மனிதனின் புகழினை மேம்படுத்தும் கருவியாக கொடை அமைகின்றது. அதனால் தான் சங்ககால மன்னர்கள் கொடைத்திறத்தை தன் உயிரினும் மேலாக கருதினார். அவ்வகையில் சங்க நூல்களில் ஒன்றான புறநானூற்றில் காணப்படும் குறுநில மன்னர்களின் வள்ளல் தன்மையை இக்கட்டுரையில் காண்போம்.

**குறுநில மன்னர்கள்**

சங்க காலத்தில் தமிழகத்தை மூவேந்தர்களும், அவர்களில்லாத பிறவேந்தர்களும் பெரும்பாலான பகுதிகளை ஆட்சிப்புரிந்து வந்தனர். அவர்களைத் தவிர சிறிய பகுதிகளை அரசாட்சி செய்தவர்களை குறுநில மன்னர்கள் என்றழைத்தனர். அத்தகைய குறுநில மன்னர்கள் 130 பேர் இருந்தனர். அவர்களில் பாரி, ஓரி, காரி, பேகன், அதியமான், குமணன், நல்லியக்கோடன், தொண்டைமான் போன்ற குறுநில மன்னர்களின் கொடைச்சிறப்பை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**பாரி**

பறம்பு நாட்டிற்கும், பறம்பு மலைக்கும் தலைவனாக விளங்கியவன் பாரி. வேளிர்குலத்தலைவன் வள்ளல் தன்மையாலும், வாளாண்மையாலும் தனக்கு தானே நிகரென விளங்கியவன். மூவேந்தரும் ஒருங்கே முற்றுமையிட்டும் கைப்பற்ற இயலாத சிறப்பு வாய்ந்த பறம்பிற்குத் தலைவன் பாரியாவான். தமிழக வரலாற்றில் நிலையான, மேன்மையான இடத்தை தன் சிறந்த பண்புகளால் பெற்றுள்ளார் என்பதை

**"பாரி பாரி என்றுபல ஏத்தி**

**ஒருவர்ப் புகழ்வர், செந்நாப் புலவர்**

**பாரி ஒருவனும் அல்லன்**

**மாரியும் உண்டு, ஈண்டு உலகுபுரப் பதுவே"** **(புறம்-101)**

என்ற வரிகளில் முல்லைக்கு தேர்கொடுத்த பாரி மட்டும் வாரி வழங்கவில்லை. உலகத்தைக் காப்பதற்காக மாரியும் வாரி வழங்குகிறது என்பது நமக்கு புலனாகிறது. மேலும்

**"பாரியும், பரிசிலர் இரப்பின்**

**வாரேன் என்னன் அவர்வரை யன்னே"** **(புறம்-108)**

என்ற மற்றொரு பாடலில் பரிசிலர் இரந்து கேட்ட அளவிலே அவர்களுக்கு உதவும் தன்மையுடையவனாக காணப்படுவதாக கூறப்படுகிறது. இதனால் பாரி மன்னன் வந்தவர்க்கெல்லாம் வாரி வழங்கும் வள்ளல் படைத்தவனாக விளங்குவது புலனாகின்றது.

**காரி**

கடையேழு வள்ளல்களுள் ஒருவனாகிய காரி பெரும் கொடையாளியாகவும், மறமேம்பாடு உடையவனாகவும் விளங்கியவன். திருக்கோவலுரில் உள்ள முள்ளூர் மலைக்கு தலைவன். சோழர்க்கும், சேரர்க்கும் புகழ்சேர்த்தவன். அத்தகைய காரியின் கொடை மேம்பாடு பற்றி

**"நாளன்று போகிப் புள்ளிடைத் நட்பப்**

**பதனன்று புக்கத் திறனன்று மொழியினும்,**

**வறிது பெயர்குநர் அல்லர், நெறி கொளப்**

**பாடு ஆன்று, இரங்கும் அருவிப்**

**பீடுகெழு மலையற் பாடியோரே"** **(புறம்-124)**

என்ற புறநானூற்று வரிகளில் நல்ல நாள் அல்லாமலும் புள்நிமித்தமும் தீதாக இருந்தபோதிலும், புலவர் தம் திறனற்ற சொற்களால் பாடிய போதும் அவர்களை வெறுங்கையோடு அனுப்பாமல், பரிசில் கொடுத்தனுப்பும் வள்ளல் தன்மை உடையவன் காரி எனக் கூறுவதன் வாயிலாக, எதனையும் எதிர்பார்க்காமல் கொடுக்கும் பண்பு புலனாகின்றது. காரி மன்னனின் இச்செயலானது

**"வறியவர்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்றொல்லாம்**

**குறியெதிர்ப்பை நீரது உடைத்து"** **(குறள்-221)**

என்ற குறளினை நினைவுறுத்தும் வகையில் அமைகின்றது.

**வல்வில் ஓரி**

ஓரி கொல்லிமலைக்கு தலைவன், வில்லாற்றலில் சிறந்தவன், 'ஆதனேரி' எனவும் அழைக்கப்படுபவன்.இத்தகைய சிறப்புவாய்ந்த ஓரி கொடையளிப்பதிலும் பெரியோன் என்பதை,

**"மலையணி குன்றத்துக் கிழவன், நாளும்**

**இழையணி யானை இரப்போர்க்கு ஈயும்**

**சுடர்வீடு பசும்பூண் சூர்ப்பு அமை முன்னக**

**அடுப்போர் ஆனா ஆதன் ஓர்**

**வாரி வன்கொடை காணிய நன்றும்"** **(புறம் - 153)**

என்ற வரிகளின் வழி அறியலாம். இதில் மழையணி குன்றத்துத் தலைவனாகிய ஓரி இரப்போர்க்கு யானையை மகிழ்ந்து அளிக்கும் சிறப்பு புலனாகிறது.

**பேகன்**

**"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**

**ஊதியம் இல்லை உயிர்க்கு"** (குறள்-231)

என்ற குறளுக்கு ஏற்ப பிறர்க்கு கொடுத்து உதவுவதையே பெரும்பேறாக கருதுபவன் பேகன், அதனால் தான் மயில் ஓர் பறவை இனம் என்பதையும் மறந்து, அதுவும் உயிர்தானே என்றெண்ணி குளிரால் நடுங்கிய அப்பறவைக்கு இரங்கி போர்வையினை அளித்தான். இதனை

**"உடா அ போரா வாகுதல் அறிந்தும் படாஅம்**

**மஞ்ஞைக்கு ஈத்த எங்கோ"** **(புறம்-141)**

என்ற வரிகளின் வழி அறிந்து கொள்ளலாம். மேலும்

**"கைவள் ஈகைக் கடுமான் பேக"** **(புறம் - 143)**

என்ற கபிலரின் வரியும் பேகனின் கொடைத்திறத்திற்குச் சான்றாக அமைகின்றது.

**அதியமான் நெடுமான் அஞ்சி**

தகடூரிலுள்ள குதிரை மலையை ஆண்டவன், மழவர் கோமான், கரும்பை தமிழகத்திற்கு கொண்டு வந்தவர்களின் வழி வந்தவன். இத்தகு சிறப்பு வாய்ந்த அதியமான் உண்போரை நெடுங்காலம் வாழவைக்கும் அரிதான கருநெல்லியை தான் உண்ணாது தமிழ் வாழவேண்டும் என்பதற்காக வாழ்ந்த தமிழ்மூதாட்டி ஔவைக்கு அளித்து புகழ் பெற்றான்.

**"ஒருநாள் செல்லலம், இருநாள் செல்லலம்,**

**பன்னாள் பயின்று, பலரோடு செல்லினும்,**

**தலைநாள் போன்ற விரும்பினன் மாதோ,**

**அணிபூண், யானை இயல்தேர் அஞ்சி**

**அதியனின், பரிசில் பெறூஉங் காலம்"** (புறம்-101)

என்ற வரிகளின் வழி தன்னை நாடி வந்து பரிசில் பெற்றுச் செல்வோன் திரும்ப திரும்ப வந்தாலும், முகங்கோணாமல் முதல்நாள் அவர்களை வரவேற்றது போலவே மகிழ்வுடன் வரவேற்று வேண்டிய பரிசினை அளிக்கும் திறனுடையவன் அதியமான் என்பதை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

**குமணன்**

இவன் முதிரைமலைக்குத் தலைவனாக விளங்கியவன். தன்னை நாடி வந்தவர்க்கு இல்லையென்று சொல்லாது வாரி வழங்கி புகழ்பெற்ற பெருவள்ளல். தன் தம்பியால் நாடு பிடிக்கப்பட்டு காட்டிலிருந்த போதும் தன்னை தேடி வந்த புலவர்க்கு தன் தலையை கொடுக்க விரும்பி வாளை அவர்களுக்கு கொடுத்த மேன்மையான கொடையாளி குமணன்

இந்த கருத்தை,

**"பரிசிலன் வாடினன் பெயர்தல் என்**

**நாடுஇழந் ததினும் நனிஇன் னாது"** (புறம்-165)

என்ற புறநானூற்று வரிகள் மூலம் தன்னை பாட வந்த புலவனுக்கு பரிசாக தன் தலையையே தந்து மேன்மையான, புகழ்பெற்ற, உலகம் போற்றக்கூடிய கொடையாளியானான் குமணன்.

**"சாதலின் இன்னாதது இல்லை இனிததூஉம்**

**ஈதல் இயையாக் கடை"** (குறள்-230)

என்ற குறளின் கருத்திற்கேற்ப குமணன் தன்னை யாசித்தவர்க்கு இல்லை என்று கூறாது தன் தலையையும் கொடுத்து பெரும்பேறு பெற்றவனானான். குமணனின் கொடைக்கு இக்குறள் சிறந்த சான்றாக அமைகிறது.

**தொண்டைமான் இளந்திரையன்**

காஞ்சியைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டவன் இளந்திரையன். இவன் சிறந்த கொடையாளி. சோழனுக்கும் பீலிவளைக்கும் மகனாக பிறந்தவன். இளந்திரையனுக்கும் அதியமானுக்கும் பகைமை ஏற்பட்டபோது சமாதானமாக போகச்செய்தவர் ஔவையார்.

**"உண்டாயின் பதம் கொடுத்து**

**இல்லாயின் உடன் உண்ணும்**

**இல்லோர் ஒக்கல் தலைவன்"** (புறம்-95)

என்ற வரிகள் வாயிலாக இளந்திரையன் உள்ளபோது அனைவருக்கும் உணவு கொடுத்தும், இல்லாதபோது பகிர்ந்தளித்தும் மகிழும் வறியவர் தலைவனாக விளங்கியவன் தொண்டைமான் என்பது புலப்படுகிறது. அதனை

**"அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்**

**பல்வேல் திரையன்"** **(பத்து-பெரும்-36-37)**

என்ற பத்துப்பாட்டு வரிகளில் அதர்மத்தை ஒழித்து, தர்மத்தை செய்வதற்கு திரையன் துணை செய்வதை காண முடிகிறது. மேலும்

**"முளைவேண்டு நர்க்கும் குறைவேண்டு நர்க்கும்**

**வேண்டுப வேண்டுப வேண்டினர்க்கருளி**

**இடைதெரிந்து உணரும் இருள்தீர் காட்சிக்**

**கொடைக்கடன் இறுத்த கூம்பா உள்ளத்து."** **(பத்து-பெரும்-443-447)**

என்ற பத்துப்பாட்டு வரிகள் வாயிலாக திரையன் நீதி வேண்டுவர்க்கு நீதி செய்து, குறைதீர்க்க வந்தவர்க்கு குறைகளை தீர்த்து கேட்போருக்கு கேட்பதெல்லாம் கொடுத்து, புலவருக்கும், இல்லோர்க்கும் எப்போதும் கொடையளிப்பவன் இவன் என்பது இப்பாடல் வழி அறிய முடிகிறது.

**நல்லியக்கோடன்**

ஓய்மாநாட்டை ஆண்டுவந்த குறுநிலத்தலைவன். கடையேழு வள்ளல்களுக்கு பின்வந்து பெருங்கொடையாளியாக விளங்கியவன். சிறுபாணாற்றுப்படைக்குரிய தலைவன். இவரைப் பாடியவர்கள் நத்தந்தனாரும், நன்னாகனாரும் ஆவார்.

**"நைந்துகரை பறைந்தஎன் உடையும் நோக்கி**

**விருந்தினன் அளியன் இவன் எனப்பெருந்தகை**

**நின்ற முரற்கை நீக்கி, நன்றும்**

**அரவு வெகுண் டன்ன தேறலோடு, சூடுதருபு,**

**நிரயத் தன்னான் வறன்களைந் தன்றே."** **(புறம்-376)**

என்ற வரிகளில் நல்லியக்கோடனின் கொடையையும், சிறப்பையும் அறியலாம். கந்தல் ஆடை அணிந்திருந்த எங்களுக்கு கள்ளும், சூடான இறைச்சியும், அதிகச்செல்வமும் கொடுத்து எங்கள் வறுமையை போக்கிய தலைவன் இவன் என கூறுவதிலிருந்து அவன் கொடைத்தன்மை புலனாகிறது.

**முடிவுரை**

கொடைத்திறமே ஒருவருக்கு நீங்கா புகழினை உண்டாக்கும். இதனை உணர்ந்தே பாரி முல்லைக்குத் தேர் கொடுத்தும், ஓரி இரவலர்க்கு நாட்டைக் கொடுத்தும், அதியன் ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்தும், பேகன் மயிலுக்குப் போர்வை கொடுத்தும், குமணன் கொடையாக தலையைக் கொடுத்தும் நீங்காப்புகழினை எய்தினர். இவர்களைப் போன்றே நிறைய வள்ளல்கள் அக்காலத்தில் கொடையளித்தும், தானதர்மம் செய்தும் சிறப்பாக வாழ்ந்து வந்தனர்.

**பயன்படுத்தப்பட்ட நூல்கள்**


1. புறநானூறு, புலியூர்க்கேசிகன், சாரதா பதிப்பகம்,சென்னை.
2. திருக்குறன், கோ.பெரியண்ணன் வனிதா பதிப்பகம், சென்னை.
3. பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும், சாமி.சிதம்பரணார்,

   அறிவுப் பதிப்பகம், சென்னை.

# பாலை நில வாழ்வியல்

***ப.ஞானாம்பாள்,** உதவிப்போராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ சக்திகைலாஷ் மகளிர் கல்லூரி, சேலம்-3.

**முன்னுரை:-**

சங்ககாலம் பொற்காலம் என்று போற்றப்படுகிறது. அக்காலத்து மக்களின் வாழ்வியலைச் சங்க இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. வாழ்வியல் என்பது குடும்பம், மனைவி, தொழில், உறவினர்கள், கல்வி, பொழுதுபோக்கு என அனைத்தும் சோர்ந்த அமைப்பாக உள்ளது. அவற்றுள் பாலை நில வாழ்வியல் எவ்வாறு அமைந்துள்ளது என்பதைப் பற்றி விரிவாக ஆராயப்படவுள்ளது.

**வாழ்வியல் விளக்கம்:-**

வாழ்வியல் என்பது மனித வாழ்க்கையின் அடிப்படையாகக் கொண்டு அமைவதாகும். அதாவது குடும்பம், கணவன், மனைவி, குழந்தைகள் இவர்களுக்கிடையேயுள்ள உறவுகள் பற்றிக் கூறுவதாகும்.

அகவாழ்வியல் என்பது குடும்பம் சார்ந்தது என்றாலும் குடும்பம் என்பது சமுதாயத்தைச் சார்ந்தே இயங்குகின்றது. ஒரு சமுதாயத்தின் நடைமுறை, பழக்கவழக்கம் போன்ற வாழ்வியலோடு தொடர்புடையதாக உள்ளது.

**வாழ்வியல் சொற்பொருள் விளக்கம்:-**

வாழ்வியல் என்பதை இலக்கண, இலக்கிய வழிகளின் வழியாக அறியமுடிகின்றது. கழகத் தமிழ் அகராதியானது வாழ்வியல் பற்றிக் கூறுகையில்

**"முறைமை,வாழ்தல், நல்வாழ்க்கை, சீவனம்,**

**உறைவிடம்,செல்வம், ஆகிய பொருட்களை குறிக்கும்"**

என விளக்கமளித்துள்ளது. அதாவது வாழ்வியல் என்பது வாழும் முறைமையினைச் சார்ந்த பழக்கவழக்கங்கள் என்பது புலனாகிறது என்பதை அறியமுடிகின்றது.

**குடும்பம்:-**

தனிமனிதன் வாழ்விலிருந்து குடும்பம் என்ற பிணைப்பு உண்டானது குடும்பம் சமூகத்தோடு உறவாடுகிறது. ஒரு சமுதாயம் செம்மையுற விளங்க தனிமனித ஒழுக்கம் அவசியமாகிறது. அவற்றுள் பாலை நிலத்தில் வாழும் தலைவன், தலைவி,தோழி, ஆகியோரின் தனிமனித ஒழுக்கங்கள் பற்றி அறியலாம்.

**தலைவன்:-**

அகஒழுக்கத்தில் தலைவனின் வாழ்வு மிகச் சிறந்த ஒன்றாக இருந்தது. தலைவன் இருமன நிலையில் அக வாழ்வை வாழ்கிறான். ஒன்று இல்லத்தின் கண் இனிது இருந்து தலைவியுடன் கூடி வாழ்வது. இன்னொன்று பொருள் வேண்டி அவளைப் பிரிந்து செல்வது என இருமன நிலையில் காணப்படுகிறான். தொல்காப்பியர் ஆண் என்பவன் எப்படியிருக்க வேண்டும் என்பதை,

“பெருமையும் உரனும் ஆடுமேன” (தொல்-பொருள்-1043)

என்று குறிப்பிடுகின்றார். அதாவது பெருமையும், வலிமையும் ஆடவர் இயல்பாக கூறப்படுகிறது. தலைவன் களவு காலத்தில் இருந்த தலைவியை கற்பு வாழ்க்கையில் மனைவியாக மாற்றி விட்டான். பொருளீட்டச் செல்ல வேண்டும் என்ற கட்டாயம் இருப்பினும்,தலைவியின் நினைவுகள் தலைவனை வாட்டுகிறது,என்பதனை

“ பல்இருங் கூந்தல்,மெல் இயல் மடந்தை

நல் எழில் ஆகம் சேர்ந்தனம் என்றும்” (அகம்.பா. 67)

இப்பாடலில் தலைவன், தலைவியின் அங்கப்பொலிவினை நினைக்கும் பொழுதினிலே பிற பொருட்களை வெறுக்கிறான் என்பதனை அறிய முடிகிறது.

**தலைவி:-**

தலைவியானவள் அதாவது பெண்ணானவள் பிறப்பு முதல் இறப்பு வரை பிறரை சார்ந்தே வாழவேண்டும் என்று கூறப்படுகிறது. கற்பு வாழ்க்கையிலும்,களவு வாழ்க்கையிலும் தலைவி, தலைவனுடன் இருப்பதையே மகிழ்ச்சியாக கருதினாள் என்பதை

“புன்கண் மாலையோடு பொருந்தி, கொடுங்கோல்

கல்லாக் கோவலர் ஊதும்” (அகம்.பா.95)

என்ற வரிகள் தலைவனைப் பிரிந்த நாள் முதல் மாலைப்பொழுதில் மட்டுமல்லாமல் வேறு சில நேரங்களில் கூட ஆயர்கள் ஊதும் குழலிசை என்னை வாட்டுகிறது என்று தலைவி கூறினான். இவ்வாறாக தலைவன் தன்னுடன் இருக்கும் பொழுதையே தலைவி மகிழ்வாக நினைக்கிறாள் என்பதை அறியமுடிகிறது.

**தோழி:-**

சங்க இலக்கியத்தில் தோழியானவள் நட்பின் இலக்கணமாகத் திகழ்ந்தாள். அகநானூற்றுப் பாலையில் காணும் தோழியானவள் தலைவியின் வாழ்வில் உண்டாகும். இயலாமை, துயரம்,விரக்தி, ஆகியவற்றிற்கு வடிகாலாகத் தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறாள். தோழி தலைவன் வினை மேற்செல்கிறான் என்று கூறியவுடன் தலைவியின் நிலை எப்படியுள்ளது என்பதை நினைத்து பொருளீட்டச் செல்வாயாக என்று கூறுகிறாள். என்பதனை,

“அகலறை நெஞ்சுளை துவலையின் மலர்ந்த

தண்கமழ் நீலம் போலக்” (அகம்.பா.143)

என்ற பாடலில் தலைவன் பொருளீட்டச் செல்கிறாள் என்று கூறியவுடனே தலைவியின் அழகிய கண்களில் நீர் சொரிந்தன. நீ இல்லாவிட்டால் இவள் உயிர் வாழமாட்டாள் எனவும், இரைதேடி வந்து ஏதும் கிடைக்காது தனித்திருந்து வருந்தும் பருந்தின் நிலையாக தலைவி உன் துணையில்லாது தனித்திருந்து வருந்துவாளே என்பதையும் தலைவனிடம் உணர்த்தினாள். இவ்வாறாக அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் தனிமனித ஒழுக்கத்துடன் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை இப்பாடல்களின் வழியாக அறியமுடிகிறது.

**விருந்தோம்பல்:-**

விருந்தோம்பல் என்றால் புதுமை, புதிது என்ற பெயர் உண்டு. விருந்தோம்பலை அக்காலமக்கள் தன் வாழ்வின் வரமாக கருதினர். வீட்டிற்கு யாரேனும் விருந்தினர் வந்தால் முக மலர்ச்சியுடன் வரவேற்று விருந்து உபசரிப்பு செய்வர். ஆனால் எதுவும் இல்லாத பாலை நிலத்தில் கூட மக்கள் விருந்தோம்பல் செய்தனர் என்பதை

“களர்வளர் ஈந்தின் காழ்கண்டன்ன

சுவல்வளை நெல்லின் செல் அவிழ்ச் சென்ற” ( சிறு பாண்- 131)

இப்பாடலில் பாலை நில மக்கள் புல்லரிசியைச் சேர்த்து நிலவு வெளிச்சத்தில் உரலில் போட்டு குற்றிச் சமைத்த உணவை உப்புக் கண்டத்தோடு உண்டார்கள். விருந்தினர்க்குத் தேக்கிலையில் உணவு படைத்தார்கள். மேட்டு நிலத்தில் விளைந்த ஈச்சங் கொட்டை போன்ற நெல்லரிச் சோற்றையும் உடும்பின் பொரியலையும் உண்டார்கள். மேலும், பாலை நிலத்தில் கோடையில் வெப்பம் அதிகமாக இருப்பதால் எங்கும் செல்ல முடியாத நிலையில் வறண்ட நிலத்தில் உதிர்ந்த சிறிய புல்லரிசியைப் பல சிறிய எறும்புகள் எடுத்து தன் வளைக்குள் வைத்திருப்பதை எடுத்து உணவாக உட்கொண்டனர் என்பதை அறிய முடிகின்றது.

இவ்வாறாக பாலை நிலத்திலுள்ள மக்கள் தனக்கு உணவில்லையென்றபோதும், புதியதாக வரும் விருந்தினருக்கு உணவு கொடுத்தனர் என்பதை அறிய முடிகின்றது.

**தொழில்:-**

பாலை நில மக்கள் மறவர்,மறத்தியர் ஆவர் மறவர்கள் என்றாலே பாலை நிலத்தில் வேட்டையாடுதல்,கொள்ளையடித்தல் போன்ற செயல்களைச் செய்பவர்கள் மறவர்களேயாவர்

**“வணர் சுரி வடியாப்பித்தை வண்கண் ஆடவர்**

**அடிஅமை பகழி ஆரவாங்கி” (அகம்.பா.289)**

என்ற பாடலில் பாலை நில வழியில் வேட்டுவர்கள் உள்ளனர்.அவர்கள் வளைந்த சுருண்ட பரட்டை தலைமுடியுடன் காட்சி அளிப்பர்.வில்லில் அம்பை அதன் சுரை நன்கு படியுமாறு வைத்த காதுவரை நாணை இழுத்து எய்துவழிப் பயணிகளைக் கொன்று அவர் பொருளைக் கொள்ளையடிப்பர். மேலும் மறவர்களுக்கு இன்னொரு பெயர் ஆறலைக் கள்வர் ஆவார். அவர்கள் வளைந்த சுருண்ட கூந்தலை உடையவர்கள் ஆறலைக் கள்வர்கள் மூங்கிலால் ஆன அம்பை வில்லில் வைத்து யாராவது வருகிறார்களா என்று எதிர்ப்பார்த்துக் காத்திருப்பார்கள்.

இவ்வாறாக பாலை நில மக்களின் தொழிலாக கொள்ளையடித்தல் உள்ளது. மழை இல்லாத வறண்டப் பகுதி என்பதால் இவையே பாலைநில மக்களின் தொழிலாக அறியமுடிகிறது.

**பழக்கவழக்கங்கள்:-**

ஒவ்வொரு நிலத்திலுள்ள மக்களும் ஓவ்வொரு பழக்கவழக்கங்களைப் பின்பற்றுகின்றனர். பாலை நிலத்தில் உள்ள மக்கள் பல்லி சத்தமிடல், சுவரில் கோடிடுதல், நடுகல்வழிபாடு, போன்றவை குறிப்பித்தக்கவையாகும்

**பல்லி சத்தமிடல்:-**

தலைவியை விட்டு தலைவன் வினைமேற் சென்றான். இக்காலத்தில் வருவேன் என்று கூறிச் சென்ற தலைவன் இன்னும் வரவில்லை. இவன் விரைவில் வரவேண்டும் என்று நினைக்கும்போது பல்லிசத்தமிடுகிறது. அதனை நல்நிமித்தமாக எண்ணி தலைவி மகிழ்கிறாள் என்பதனை,

**“பகுவாய் பல்லி படுதொறும் பரவி**

**நல்ல கூறென நடுங்கிப் “ (அகம். பா.287)**

என்ற பாடலின் வழியாக அறியமுடிகிறது.

**சுவரில் கோடிடுதல்:-**

அக்காலத்து தன் கணவன் தன்னை விட்டுப் பிரிந்து சென்ற பிறகு,இக்காலத்தில் வருவேன் என்று கூறியும் அவன் வரவில்லையென்றால் அவன் வரவை எதிர்நோக்கி சுவற்றில் கோடிட்டு நாட்களை எண்ணுவாள் என்பதை,

**“ சேணுறை புலம்பின் நாண் முறையிழைத்த**

**திண்சுவர் நோக்கி நினைந்து கண்பனி” (அகம்.பா.289)**

என்ற பாடலின் மூலம் தலைவனை விட்டுப் பிரிந்த தலைவி அவன் பிரிந்த நாட்களைச் சுவற்றில் கோடிட்டு அந்த நாட்களை எண்ணி,மனம் வருந்தினாள் என்பதை அறியலாகின்றது.

**நடுகல் வழிபாடு:-**

நடுகல் வழிபாடுயென்பது போரில் விழுப்புண்பட்டு இறந்தவர்க்கு நடுகல் வழிபாடு செய்வர். பசுக்களைக் கவர்ந்து சென்ற பகைவரைத் தடுத்தும் போர்செய்து அவற்றை மீட்டார்கள். அப்போரில் இறந்தவர்களுக்கு நல்வழிபாட்டை மேற்கொண்டனர் என்பதை,

**“தறுகிணாளர் நல்லிசை நிறுமார்**

**இளையர் பதிப்பெயரும் அஞ்சுரம் இறந்தவர்” ( அகம். பா. 269)**

என்ற பாடலின் மூலம் அறியமுடிகின்றது. மேலும் நடுகல்லின் முன்பு ஆட்டுக்கிடாவை வெட்டியும் வழிபாடு செய்தனர் என்றும் அறியமுடிகின்றது.

**முடிவுரை:-**

பாலை நில வாழ்வியல் என்னும் தலைப்பில் வாழ்வில் என்பது மனிதனின் ஒழுக்கத்தோடு வாழ வேண்டும் என்பதற்கு உதாரணமாக தலைவன்,தலைவி, தோழி, ஆகியோரின் பண்புநலன்கள் பற்றி அறிய முடிகின்றது. பாலைநிலத்திலுள்ள மறவர்கள் வருபவர்களை அடித்து அவர்களின் பொருட்களை எடுத்து கொள்கின்றனர். என்றும் ஒன்றும் இல்லாத பாலை நிலத்தில் கூட விருந்தினர்களுக்கு உணவு படைத்தனர் என்பதையும் பாலை நில மக்களின் நம்பிக்கை பழக்க வழக்கங்கள் ஆகியவற்றையும் இக்கட்டுரையின் வழியாக அறியமுடிகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. கழகத் தமிழ் அகராதி – பக் -326
2. தமிழண்ணல் தொல்.பொருள். நூல்- 1043
3. ச.வே. சுப்பிரமணியம் சங்க இலக்கியம் பா-67
4. அ.மாணிக்கனார் சங்க இலக்கியம் மூலமும் உரையும் பா-95
5. மேலது பா.எண்-143
6. மேலது பா.எண்- 131
7. மேலதுபா.எண்- 287
8. மேலது பா.எண்-289
9. மேலது பா.எண்- 269

**துணைநூற்பட்டியல்**


1. கழகப்புலவர்குழு – கழகத் தமிழ்அகராதி திருநெல்வேலிதென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை-18
2. தமிழண்ணல் -தொல்காப்பியம்(மூலமும்உரையும்) மீனாட்சி பதிப்பகம் மதுரை-01
3. ச.வே. சுப்பிரமணியம் சங்க இலக்கியம் மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108
4. அ.மாணிக்கனார் சங்க இலக்கியம் மூலமும் உரையும் வர்த்தமானன் பதிப்பகம் சென்னை 17